# இளம்பரிதி 2015/16

## முத்தமிழ் விழா சிறப்பு மலர்



பிரதேச கலாசாரப் பேரவை
பிரதேச செயலகம்
கோறளைப்பற்று.

# இளம்பரிதி

## முத்தமிழ் விழா சிறப்பு மலர்

வெளியீடு :

பிரதேச செயலக கலாசாரப் பேரவை

கோறளைப்பற்று, வாழைச்சேனை.

# இளம்பரிதி

பதினொராவது ஆண்டு
முத்தமிழ் விழா சிறப்பு மலர்


கணினி வடிவமைப்பு

ஜெயசுதா உதயபிரசாத்

அட்டைப்பட வடிவமைப்பு

திரு.மு.சதாகரன்

அச்சுப்பதிப்பு

ஷெரோனி பப்ளிகேஷன்
சூளாவடி, மட்டக்களப்பு.

வெளியீடு

பிரதேச செயலக கலாசாரப் பேரவை
கோறளைப்பற்று, வாழைச்சேனை.
2015/16


## பேரவை உறுப்பினர் விபரம்

**தலைவர்**

திரு.வி.வாசுதேவன்
பிரதேச செயலாளர்

**உபதலைவர்**

திருமதி. நிருபா பிருந்தன்
உதவிப் பிரதேச செயலாளர்

**செயலாளர்**

திரு.மு.சதாகரன்
கலாசார உத்தியோகத்தர்

**உப செயலாளர்**

திருமதி.சசிகலா சிவபாதம்
இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்

**பேரவை உறுப்பினர்கள்**

திரு.பெ.புண்ணியமூர்த்தி
திரு.க.நடேசன்
கலாபூசணம்.எச்.மெத்தியேஸ்
திரு.எஸ்.நல்லதம்பி
கலாபூசணம்.முத்துமாதவன்
திருமதி.ஸோபா ஜெயரஞ்சித்
திரு.க.ஜெகதீஸ்வரன்
திருமதி.இந்திராணி அருட்பிரகாசம்
திரு.க.விமலநாதன்
திரு.எம்.குணபாலன்
திரு.அ.அழகுராஜ்
திருமதி.ராதிகா சுரேஸ்
செல்வி.ஆர்.விஜயமாலினி
செல்வி.ருசாந்தினி தெய்வநாயகம்
திரு.பெனடிக் மோஷஸ்
திருமதி.எஸ்.குமரவேல்
திருமதி.கீதா நகுலேஸ்வரன்



# வாழ்த்துச் செய்தி

கோறளைப்பற்று வாழைச்சேனை பிரதேச செயலகத்தினால் வருடா வருடம் கொண்டாடிவரும் பிரதேச முத்தமிழ் விழாவை முன்னிட்டு வெளியிடவுள்ள சிறப்பு மலர் "இளம்பரிதி" நூலுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

ஒரு பிரதேசத்தின் கலை, கலாசார விழுமியங்களை பரிணமிக்கும் ஆவணங்களை பொதிந்து வருங்கால சந்ததியினரின் கைகளில் தவளும் ஆவணமாக இம்மலர் வெளியீடு அமையும் என்பது மிகையாகாது. வாழைச்சேனை வாணர்கள், கலைஞர்கள், மாணவர்கள், குழந்தைகள் ஆகிய பல திறத்தினரதும் ஆக்கங்களை தாங்கி வெளிவரும் இந்நூலானது வாழையடி வாழையாக வளர்ந்து, மக்கள் மனங்களை மலர்ந்திட வைக்கும் என்பது வெள்ளிடை மலை.

எனவே, இக்கலை, இலக்கிய பாரம்பரிய பண்பாட்டு அம்சங்களை தாங்கி வரும் "இளம்பரிதி" மலரானது மலர்வதற்கு ஊக்கமளித்த பிரதேச செயலாளர், கலாசாரப் பேரவைக் குழு உறுப்பினர்கள், விழாக் குழுவினர்கள் மற்றும் நன்கொடை வழங்கியவர்கள் யாவருக்கும் எனது இதயம் கனிந்த நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் மனமகிழ்ச்சி அடைகின்றேன்.

**திருமதி.பி.எஸ்.எம்.சார்ள்ஸ்**
மாவட்டச் செயலாளரும், அரசாங்க அதிபரும்,
மட்டக்களப்பு மாவட்டம்.



# வாழ்த்துச் செய்தி

கோறளைப்பற்று வாழைச்சேனை பிரதேசம் மட்டக்களப்பு மாவட்டத்தில் வளம்மிக்க பிரதேசமாகவும், கலை இலக்கியங்களைப் பேணிப்பாதுகாத்து வெளிப்படுத்தும் பிரதேசமாகவும் விளங்குகின்றது. இப்பிரதேச மக்களின் சமூக மேம்பாட்டினை கலையூடாக வளர்க்கும் நோக்கில் முத்தமிழ் விழாவும், அதனை முன்னிட்டு "இளம்பரிதி" எனும் சிறப்பு மலர் வெளியீடும் இடம்பெறுவது குறித்து பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

மனிதனின் தொலைநோக்கு சிந்தனைக்கு வித்தாக அமைவது கலை இலக்கியங்களே. சமூக மாற்றத்திற்கும், சமூக மேம்பாட்டிற்கும் உறுதுணையாக, உந்து சக்தியாக நிலைத்துநின்று ஆற்றலை வழங்குவதும் கலை இலக்கியஙகளே. தொலைநோக்கு சிந்தனை -யாளர்கள் செம்மையான கலை இலக்கியங்களை வடிவமைப்பதில் ஆர்வம் காட்ட வேண்டும். இதுவே காலத்தின் தேவையாகும். அறிவுசார் நுட்பங்கள் அதிகரித்துள்ள இக்காலகட்டத்தில் இம்மாற்றத்திற்கேற்ற வகையில் சமுதாய போக்குகளும் காணப் -படுவதால் இவற்றை ஈடுசெய்யும் இலக்கியங்களே தற்காலத்திற்கு ஏற்றதாகும். முத்தமிழ் விழாவும், அதனோடு இணைய வெளியிடப்படும் "இளம்பரிதி" சிறப்பு மலரும் சிறப்பாக பரிணமித்து கலை ஆர்வத்திற்கு விருந்தளிக்க வாழ்த்துகின்றேன்.

இவ்விழாவை சிறப்புற ஏற்பாடு செய்து வழிகாட்டி நடாத்து -கின்ற பிரதேச செயலாளரையும், விழாவுக்கு தமது பங்களிப்பை நல்கியிருக்கின்ற கலாசார உத்தியோகத்தர்கள், கலாசாரப் பேரவையினர் மற்றும் கலைஞர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியினையும் வாழ்த்தினையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திருமதி. சிவப்பிரியா வில்வரத்தினம்**
மகாணப் பணிப்பாளர்,
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
கிழக்கு மாகாணம்.



# வாழ்த்துச் செய்தி

**கோ**றளைப்பற்று பிரதேச கலாசாரப் பேரவையால் இவ்வருடம் வெளியிடப்படவுள்ள 'இளம்பரிதி' முத்தமிழ் விழா சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

பல்வேறு காரணங்களால் இங்குள்ள மக்களின் பண்பாடு, பாரம்பரியங்களினது இருப்பு என்பது கேள்விக் குறியாக உள்ள நிலையிலும், அதனைத் தக்கவைத்துக் கொள்ளும் நோக்குடன் எமது பிரதேச செயலக கலாசார பேரவை வருடாவருடம் முத்தமிழ் விழாவினூடாக கலை இலக்கிய போட்டிகள் நடாத்துவதும், மரபுசார் கலை நிகழ்வுகளை ஒழுங்கு செய்வதும், கலைஞர்களைக் கௌரவித்தலும், அதற்கு மேலாக பிரதேச கலாசாரத்தின் ஆவணப்படுத்தலாக 'இளம்பரிதி' மலர் வெளியிடுவதும் பாராட்டத்தக்கதொரு விடயமாகும்.

இவ்வருடம் வெளிவரும் 11வது சிறப்பிதழ் தனித்துவம் வாய்ந்ததாகவும், கனதியானதாகவும், பிரதேசத்தின் பல்துறை அம்சங்களில் தடம்பதித்தும் வெளிவருவது நோக்கத்தக்கது.

எனவே, இந்நற்பணியை முன்னெடுத்துச் செல்லும் கலாசாரப் பேரவை உறுப்பினர்கள், அலுவலக உத்தியோ கத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள், நிதியுதவி நல்கும் கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மற்றும் நிறுவனங்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

**திரு. வி.வாசுதேவன்**
பிரதேச செயலாளர்
கோறளைப்பற்று.



# வெளியீட்டுரை

இளம்பரிதி பதினொராவது மலரினை வெளியிடுவதில் மகிழ்வுறுகின்றோம். இளம்பரிதி மலர் நல் ஆவணப்பதிவாக தொடர்ச்சியாக வெளிவரவேண்டும் என்பதே எமது அவா. பிரதேச மக்களின் வரலாறு, பண்பாடு பாரம்பரியங்கள் யாவும் மென்மேலும் ஆழமாக ஆராயப்பட்டு ஆக்கங்கள் வரையப்பட வேண்டும். இதற்கு பிரதேச எழுத்தாளர்களின் ஆதரவு முக்கியமானதாகும். நல் ஆக்கங்கள் பெறுவதில் ஏற்படும் சிரமம் இளம்பரிதியின் தொடர்ச்சியான வருகையினைப் பாதிக்கும்.

பண்பாடு மாற்றமடையத்தக்க நெகிழ்வுத் தன்மை கொண்டது. அசுர வேகத்தில் வளர்ந்துவரும் பன்னாட்டு நவீன தகவல் தொழல்நுட்ப வளர்ச்சி அனைத்துப் பண்பாடுகளின் இருப்பையும் கேள்விக்குறியாக்கி வருகின்றது. பண்பாட்டில் ஏற்படும் மாற்றம் தடுக்க முடியாதது எனினும் பாரம்பரியமாகப் பின்பற்றப்பட்டு வரும் எமது மரபுகள் வாழ்வியல் அம்சங்கள், கலை, கலாசார விழுமியங்கள், நம்பிக்கைகள் யாவற்றையும் ஆவணப்படுத்தி, அடுத்த சந்ததிக்குக் கையளிக்க வேண்டியது காலத்தின் கட்டளையாகும். இக்காத்திரமான பணிக்கு இளம்பரிதி மலர் தொடர்ச்சியான பங்களிப்பினை நல்கும் என்பதே எமது நம்பிக்கையாகும்.

இம்மலர் வெளிவருவதற்கு நல் ஒத்துழைப்பு ஆலோசனைகள் நல்கிய பிரதேச செயலாளர், உதவிப் பிறதேச செயலாளர் மற்றும் கலாசார பேரவை உறுப்பினர்கள், ஆக்கங்கள் வழங்கிய அறிஞர் பெருமக்கள், வாழ்த்துரை வழங்கிய பெரியோர்கள், கிராமசேவை உத்தியோகத்தர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள், நிதியுதவி நல்கிய பெருந் தகைகள் ஆகியோருடன் இம்மலரை சிறப்புற வடிவமைத்த ஜெயசுதா உதயபிரசாத், மற்றும் மலரை உரிய நேரத்தில், நேர்த்தியாக அச்சிட்டுத் தந்த ஷெரோணி பிரிண்டர்ஸ் அச்சகத்தாருக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவிகள் நல்கிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

**திரு. M.சதாகரன்**
*கலாசார உத்தியோகத்தர்,*
*கோறளைப்பற்று.*

# உள்ளே...

இளம்பருதி எழுந்து வருகிறான் (கவிதை) (viii)

எமது கிராமம் நாசிவந்தீவு 01

அப்புச்சி (சிறுகதை) 13

கோறளைப்பற்றுப் பிரதேச கிராமிய விளையாட்டுக்கள் 19

சித்த மருத்துவமும் அதன் சிறப்பம்சமும் 30

ஜனித்து மீண்டுமொருமுறை ஜயத்துடன் (கவிதை) 37

நிவாரணத் தண்ணீர் போத்தல் (சிறுகதை) 38

சம்பிரதாய கலாசார மாற்றத்திற்கான காரணம் 45

கலை இலக்கிய சமூக மாற்றம் 52

தாய் (கவிதை) 57

கலை இலக்கிய போட்டி முடிவுகள் 59

கலைஞர் கௌரவம் 62

# இளம்பரிதி எழுந்து வருகிறான்



காலை விடி வெள்ளி
கண்முன்னே வந்து நிற்க
சோலை பசுமையெல்லாம்
தங்க வெளிப்பரப்பாக
ஞால விருளகற்றும்
ஞாயிறுவும் வந்து விட்டான்!
கோல் புறப் புள்ளினங்கள்
கூவிக் கரைகின்றன !

தாமரையும் மொட்டவிழ
தங்க நிகராதவனும்
பூமகளின் உடல் பொங்க
புன்னகைத்து எழுகின்றான் !
பூமலும் பொய்கை யெல்லாம்
புதுப் பொழிவு காட்டி நிற்க !
தாமநிதி வருகிறான்
தரணி யெல்லாம் சிரிக்குதம்மா!

வந்து விட்டான் பகலவனும்
வண்ணங்கள் காட்டியெமை
சுந்தரஞ் சூழ் தவர்க்கமென
தூய வெளிப்வைத் தந்தென்கோ
அந்தோ எழுகின்றான்
அவனசைவில் பனியரக்கன்
வெந்து மறைகின்றான்
வெள்ளி மணிப்பாசறைக்குள் !

இருளரக்கன் தான் ஓட
இரவியெனும் மன்னனவன்
மருள் பொங்கும் மனம் போல
மண்டிப் போய்க்கிடந்த வெளி
பரப்பெல்லாம் சுடர்கான
பகல் வெளிக்குள் வருகின்றான்
உரமிகுந்த பரிதியவன்
உலகமே அவன் கையில் !

கலாபூசணம் எச் .மெத்தியேஸ்




**அறிமுகம் :**

மட்டக்களப்பு மாவட்டத்தின் கோறளைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் கிழக்கே சுமார் 8Km தொலைவில் நாசிவந்தீவு கிராமமானது அமைந்துள்ளது. இது 11.52 சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்டது. இதன் எல்லைகளாக கிழக்கே கடலும், தெற்கு வாழைச்சேனை ஆறும், மேற்கு மயிலங்கரைச்சை ஆறும் வடக்கு வட்டவான் ஆறும் காணப்படுகின்றது. நான்கு பக்கமும் நீரினால் சூழப்பட்டு தென்னை, பனை மற்றும் கண்டல் தாவரங்கள் நிறைந்த ஓர் அழகிய தீவாகும். இதன் பிரதான போக்குவரத்து மார்க்கம் நீர்வழியாகும். மரக்கலம், பைவர் தோணி, இயந்திரப் படகு போன்றவற்றின் மூலம் போக்குவரத்து மேற்கொள்ளப்படுகிறது.

இங்கே தற்போது 375 குடும்பங்களும், 1188 தனி நபர்களும் காணப்படுகின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் மீன்பிடி தொழிலையே மேற்கொண்டு வருகின்றனர். இங்கு அதிகளவான மீன், இறால், நண்டு மற்றும் மட்டி என்பன காணப்படுகின்றன. நாசிவந்தீவு கிராமமானது சுமார்

200 வருடங்களுக்கு முன்பு தோற்றம் பெற்ற பூர்விக கலாசார பண்பாடுகள் நிறைந்து காணப்படுகின்றது. இதற்கு 'நாசிவந்தீவு' எனப் பெயர்வரக் காரணம் 'நாச்சி' எனும் மூதாட்டி வாழ்ந்ததாகவும் அவரின் பெயரை ஒட்டி (நாச்சி வந்+தீவு) நாசிவந்தீவாக மருவியதாகக் கூறப்படுகின்றது. மேலே குறிப்பாக 'நாச்சி' எனும் மூதாட்டியின் கணவர் கொட்டியாரம் எனும் ஊரைச் சேர்ந்தவர் என கூறப்படுகின்றது.

மட்டக்களப்பு திருகோணமலையின் பிரதான பாதையாக நாசிவந்தீவு பழைய துறையடியே காணப்பட்டது. அப்போது பாதை (பாரிய படகு இயந்திரம்) இயங்கியது. 1922 ஆம் ஆண்டு ஓட்டமாவடிப் பாலம் கட்டப்பட்டதை அடுத்து இவ்வீதியின் பயன்பாடு குறைவடைந்தது. 1957ம் ஆண்டு கட்டுமுறிவு பாலம் வெள்ளத்தால் உடைக்கப்பட்டது. அதனையடுத்து மரத்தினால் பாலம் செய்யப்பட்டது. பின்னரே கொங்கிறீட் பாலம் புனரமைக்கப்பட்டது.

1920ம் ஆண்டு காலங்களில் 22 குடும்பங்களே இங்கு காணப்பட்டன. வாழைச்சேனைப் பகுதியைச் சேர்ந்தவர்கள் தென்னந்தோட்டம் அதிகளவில் இங்கு செய்து வந்தனர். பிற்காலத்தில் அயல் கிராமங்களான மயிலங்கரைச்சை, வட்டவான், பனிச்சங்கேணி, வாகரை, வாழைச்சேனை ஆகிய கிராமங்களில் இருந்து இங்கு வந்து திருமணம் செய்தனர்.

**கல்வி :** நாசிவந்தீவில் பாடசாலை முதன்முதலாக 1922ம் ஆண்டு பழைய துறையடிக்கு அருகாமையில் ஓலையினால் (கிடுகு) கட்டப்பட்டது. முதலாவது அதிபராக காத்தமுத்து என்பவரும் இரண்டாவதாக கந்தையா என்பவரும், மூன்றாவதாக ஏரம்பமூர்த்தி எனும் அதிபரும் காணப்பட்டனர். நாசிவந்தீவு பாடசாலையானது பின்னர் இடம் மாற்றப்பட்டு, தற்போது பாடசாலை உள்ள இடத்தில் கிடுகினால் கட்டப்பட்டது. 1945ம் ஆண்டு 52 மாணவர்கள் கல்வி கற்றனர். சுனாமி அனர்த்தத்தை அடுத்து மாடிக்கட்டிடமாக தற்போது உள்ள பாடசாலை அமைக்கப்பட்டது.

1950ம் ஆண்டு காலத்தில் கிராமோதய சபை மற்றும் தொண்டர் சபை அமைக்கப்பட்டது. முதலாவது கிராம சேவையாளராக த.கணபதிப்பிள்ளை என்பவர் காணப்பட்டார். அப்போது அவரின் பதவி விதானை என்பதாகும்.

இவருக்கு உதவியாக கிராமத்தில் ஒருவர் **பட்டங்கட்டியார்** எனும் பதவியை வகிப்பார். அப்போது கொம்பன் என்பவரும் பின்னர் இளையதம்பி என்பவரும் இப்பதவியை வகித்தனர். **இப்பட்டாங்கட்டியார்** கிராமத்தில் ஏற்படும் சிறு தகராறுகளை தீர்த்து வைத்தலும் திருமணங்களை முன்னின்று நடாத்துதல், கிராமத்தில் ஏற்படும் சம்பவங்களை விதானைக்கு அறிவித்தல் போன்ற பணிகளை மேற்கொள்வார். அடுத்த விதானையாக நல்லதம்பி என்பவரும் பின்னர் ஆறுமுகம், சின்னத்தம்பி, இராசநாயகம், தங்கவேல், கருணாகரன், சாமித்தம்பி, மேகநாதன், வசந்தன் ஆகியோரும் காணப்பட்டனர்.

**தெய்வ வழிபாட்டு முறைகள் :** ஆரம்ப காலத்தில் நாசிவந்தீவு கிராமமானது **இரு பிரிவுகளாகக்** காணப்பட்டது. அதாவது தூக்குவித்தல், நாசிவந்தீவு என்பனவாகும். பின்னர் புளியடிமடு எனும் பிரிவும் உருவானது.

அக்காலத்தில் **தெய்வ வழிபாட்டு** முறைகளாக 3 பிரதான கோயில்கள் காணப்பட்டன. ஒன்று மாரியம்மன், கப்பல் தெய்வம், நாச்சிமா பேய் கோயில் என்பன உருவாக்கப்பட்டது. அப்போது கோயில் வரியாக ரூபாய் 3.50 சதம் அறவிடப்பட்டது. பணம் அற்றவர்கள் நெல், தேங்காய், பால், பழம் என்பவற்றை வழங்கினர். நாச்சிமா பேய் தெய்வமானது கழுவங்கேணியில் இருந்து பத்தியாஸ் பாட்டியினால் பலகார படையல் பெட்டியில் அழைத்துவரப்பட்டது. (பெட்டியின் மேல் வெள்ளை கொக்கு போல் தெய்வம் இருந்து வந்ததாம்).

நாச்சிமா பேய் தெய்வத்திற்கு என ஓர் வரலாறும் உள்ளது. அதாவது இது கடல்கரையில் வாழ்ந்துள்ளது. இதன் பிள்ளைகளை கடல் கொண்டு சென்றதனால் பிள்ளைகளைத் தேடி அலைந்து திரியுமாம். இதற்காக நெல், மஞ்சள் என்பன படையல் வைக்கப்படும். இது இருளில் மட்டும் வழிபடும் தெய்வம் ஆகும். இதனை வழிபடுவதனால் இங்குள்ள பிள்ளைகளுக்கு நோய் பரவாது என்பது இவர்களது நம்பிக்கை ஆகும். இத் தெய்வத்திற்காக அறவிடும் நெல்லை காட்டில் உள்ள ஒரு பெரிய மரத்தில் வைக்கோலில் ஆன தாங்கி உருவாக்கப்பட்டு அதிலே சேகரிப்பர் இதனை **'கோட்டை கட்டுதல்'** என அழைப்பர். இந் நெல்லை மாத்திரமே படையலுக்கு எடுக்கப்படும்.

நாச்சிமா பேய் தெய்வத்தின் வழிபாட்டு மலர் திருக்கொன்றை மலர் ஆகும். கப்பல் தெய்வம் - இது ஓர் கடல் தெய்வம் ஆகும். இது மீனவர்களை பாதுகாக்கவும் மீன்பிடியை அதிகரிக்கவும், மக்களின் நோய் நொடியை தடுக்கவும் வழிபடப்பட்டது.

**பொருளாதர நடவடிக்கை :** பாரம்பரிய மீன்பிடி முறைகளாக கரப்பு குத்துதல், சார் வைத்தல், மீன் கூடு வைத்தல், முக்காலி பயன்படுத்தல், (நன்கு பிடித்தல்) அத்தாங்கு வடித்தல், அடப்பு கட்டுதல், களைக்கம்பு போடல் (தூண்டில் போடல்) மற்றும் வீச்சுவலை என்பன மேற்கொள்ளப்பட்டன. அக்காலத்தில் காணப்பட்ட திருவன், வேளா, செங்கணன், மஞ்சல்காலை, நூலான, வக்காச்சி போன்ற மீன்கள் காணப்பட்டன. இவை சுனாமிக்குப் பின்னர் முற்றாக அழிவடைந்துவிட்டன. வண்ணாத்தி மீன் தற்போது இல்லை மேலும் இங்கு **கண்டல் தாவரங்களாக** கிண்ணை, தில்லை, தாழை, கிரிக் கண்ணா, வெற்றிலைக் கண்ணா, தொப்பிக் கண்ணா, சோமுந்திரி, முள்ளி, புன்னை, களைச்சி, நச்சு, பீச்சுலாத்தி போன்ற தாவரங்கள் காணப்பட்டன. சுனாமியின் பின்னர் இவற்றில் பல அழிவடைந்து விட்டன.

**பாரம்பரியம்:** பாரம்பரிய விவசாய முறைகளாக மாட்டுக்கலப்பை பயன் படுத்தப்பட்டது. விவசாய காலமாக மும்மாரி, காலபோகம் என இருவகை காணப்பட்டது அக்காலத்தின் களத்துப் பெயர்களாக பல புனைப் பெயர்கள் பயன்படுத்தப்பட்டன. இவை வேளாண்மை செய்கையில் பயன்படுத்தப்படுவது எழுத்தற்ற சட்டமாக காணப்பட்டது. மேற்கூறப்பட்ட பெயர்களைத் தவிர வேறு வார்த்தைகள் பாவித்தால் நெல் விளைச்சல் குறையும் என்பது பூர்விக நம்பிக்கை ஆகும்.

## பாரம்பரிய விவசாய முறையின் களத்துப் பெயர்கள்

(1) களம் - சூடு வைக்கும் இடம்

(2) ஒட்டுவாயன் அல்லது கூழக்கையன் - சாக்கு

(3) பெருவாயன் அல்லது கடகம் - கைப்பெட்டி

(4) கணக்கன் - மரைக்கால்

(5) பல்லுவாயன் - வேலகாரன் கம்பு
(6) அவுத்துவான் - கயிறு
(7) பிரிஞ்சான் - வைக்கோல்
(8) கலங்கல் - தண்ணீர்
(9) வாரிக்காலன் - மாடு
(10) அவ்வூரி - நெல் தூர்த்தும் கோபுரம்
(11) கோலம் - ஈர்க்குத்தடி (புல்லால் கட்டப்படுவது)
(12) வெள்ளை - சோறு
(13) அரும்பு - அரிசி
(14) கருங்காய் - பாக்கு
(15) அழுகல் - வெற்றிலை
(16) சங்குவெள்ளை - சுண்ணாம்பு
(17) போல் / வோள் - சாணம்
(18) குசவன் - குடம்
(19) எளிச்சிவாயன் - தேங்காய்
(20) கட்டுதல் - அள்ளுதல்
(21) பெருகுதல் - கொண்டுவருதல்
(22) சல்வாயன் - நாய்
(23) குங்கும் புழுங்கன் - பூனை
(24) அடக்கலச் செல்வி - பெண்
(25) கட்டாடிப் பொல்லன் - சூடு அடிக்கும் தலைமை நபர்
(26) முல்லைக் காரர் - வேளாண்மை செய்கையின் பொறுப்பானர்.

**அரக்கு வைத்தல்** - சூடு அடிக்கும் முன்னதாக களத்தின் நடுவில் பொன், வெள்ளி, சாராயம், தங்கம், செப்பு, ஆகியவற்றை வைத்து புதைத்தல். அரக்கு வைத்தலின் நோக்கம் பூதம் நெல்லைக் கொண்டு செல்லாதிருக்க காவல் செய்வதாகும்.

**அவணம்** - நெல்லை அளக்கும் அளவு முறை (1 அவணம் - 30 மரைக்கால்)
**பொலி** - நெல்

**சமூக அமைப்புக்கள் :** நாசிவந்தீவு கிராமத்தில் முதன் முதல் சமூக அமைப்பாக கிராம சமூக அமைப்புக்கள், அபிவிருத்திச் சங்கம் தோற்றம் பெற்றது. இது 1952ம் ஆண்டு உருவாக்கப் பட்டது. தலைலவராக கணபதி சின்னத்தம்பி செயலாளராக கண்ணன் செல்லையாவும் பொருளாளராக வன்டன் செல்லையாவும் காணப்பட்டனர்.

இரண்டாவது சங்கமாக மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் 1978ம் ஆண்டு உருவாக்கப்பட்டது. தலைவியாக சீனித்தம்பி மாரிமுத்தும் செயலாளராக பழனி மாரிமுத்து என்பவரும் காணப்பட்டனர். 1982 ஆண்டு இச் சங்கம் பதிவு செய்யப்பட்டது. அப்போது சீ. மாரிமுத்து தலைவராகவும் கா. வேலாத்தை செயலாளராகவும் பழனி மாரிமுத்து பொருளாளராகவும் காணப்பட்டனர்.

ஆலயத்தை பொறுத்தவரை ஸ்ரீகணேசர் ஆலயமானது 1940ம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இது ஆற்றோரம் கிடுகினால் அமைக்கப்பட்டு வழிபடப் -பட்டது. பின்னர் கடுவன் முருகன் என்பவரால் தற்போதைய இடத்தில் இவ் ஆயலம் மாற்றப்பட்டது. அப்போதைய தலைவராக சீனி சின்னத்தம்பி என்பவரும் காரியதரிசியாக கண்ணன் செல்லையா என்பவரும் காணப்பட்டனர்.

கண்ணகியம்மன் ஆலயமானது 1954ம் ஆண்டளவில் கண்ணன் கணபதி என்பவரால் உருவாக்கப்பட்டது. அப்போதைய வண்ணக்கராக வன்டன் வேலுப்பிள்ளை காணப்பட்டார். ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலையமானது 1989ம் ஆண்டு செல்லத்தம்பி தம்பிராசா என்பவரால் உருவாக்கப்பட்டது. முதலாவது தலைவராக செல்லத்தம்பி சீனித்தம்பி காணப்பட்டார்.

ஸ்ரீ முருகன் ஆலயமானது 1997ம் ஆண்டு சின்னப்பு பொன்னையா என்பவரால் உருவாக்கப்பட்டது. அப்போதைய தலைவராக காத்தமுத்து செல்வரெட்ணம் காணப்பட்டார்.

## ஊருக்கு உரித்தான சொல் (இடத்தின் பெயர்)

| | |
|---|---|
| கடுவாக்கரை | - பருவகாலத்தில் திறக்கப்படும் முகத்துவார பகுதி |
| பூவிரசம் படம்பு | - பூவரசை மரம் படர்ந்துள்ள கல்பகுதி |
| கொக்குபிச்சிகல் | - கொங்கு தங்கு நின்று எச்சமிடும் இடம் |
| செம்மணத்தியடி | - செம்மணத்திமரம் உள்ள இடம் |
| வீரையடி | - வீரை மரம் உள்ள இடம் |
| கீச்சாம்பரப்பு | - கீச்சான் எனும் பறவை கூட்டமாக தங்கும் இடம் |
| பொட்டககல் | - கறுத்த கல் உள்ள இடம் |
| சின்னக்குளம் | - சிறிய குளம் உள்ள இடம் |
| புளியடிமடு | - புளிய மரம் நிறைந்து காணப்படும் இடம் |
| கரச்சை | - கண்டல் கல் காணப்படும் அற்றோரம் |

அக்காலத்தில் பொதுக் கட்டிடங்கள், போக்குவரத்து வசதிகள், தொடர்பாடல் முறைகள் மிகவும் அரிதாகக் காணப்பட்டது. அதன் போது தகவலைப் பரிமாறுவதற்காக "வியளம்" அனுப்புதல் முறை காணப்பட்டுள்ளது. அதாவது ஒரு குறிப்பிட்ட நபர் மூலம் தகவலை பல நபருக்கு தெரியப்படுத்துதல் ஆகும்.

**திருமண முறை :** அக்காலத்தில் திருமண முறையாக தேசவழமைச் சட்டத்தின் கீழ் சம்பிரதாய முறையின்படி திருமணம் நிகழ்த்தப்பட்டது. அதவாது மாப்பிள்ளை கேட்டு வருதல், சீதனம் பேரம் பேசுதல், பெண் பார்த்தல், திருமணத்தின் போது கைகோர்த்து விடல், கலத்தில் போடுதல், பந்தி பரிமாறுதல், தாம்பூலம் வழங்கல் என்பன நடைபெற்றன. இங்கு மாப்பிள்ளை கேட்டுவரும் போது பெரிதான 'மாப்பிள்ளை கொழுக்கட்டை' செய்து ஒரு பெட்டியும், பலகாரம் ஒரு பெட்டியும், வாழைப்பழம் ஒரு பெட்டியும் ஆக மூன்று பெட்டி கொண்டு செல்லப்படும். அங்கே மாப்பிள்ளையால் 'மாப்பிள்ளை கொழுக்கட்டை' வெட்டப்படும். உள்ளே வைக்கப்பட்டிருக்கும் வெள்ளியாலான கனையாணி (மோதிரம்) யினை மாப்பிள்ளைக்கு மணப்பெண்ணின் சகோதரன் போடுவார். இதுவே அக்கால திருமண ஒப்பந்தமாகக் காணப்பட்டது.

திருமணத்தின் போது ஆணின் பெற்றோரும், பெண்ணின் பெற்றோரும் உறவினர் முன்னிலையில் சுபமுகூர்த்த நேரத்தில் கைகோர்த்து விடுபர். பின்னர் கலத்தில் இடல் நிகழ்வு இடம்பெறும். இதற்கு முன்னர் பால், பழம் அருந்துதல் நிகழ்வு நடைபெறும். இது மூன்று முறை இடம்பெறும். பின்னர் கலத்தில் இடுவதற்க்காக **வட்டி** (வெங்கல பாத்திரம்) அதனை வைப்பதற்கு **சேர்வைக்கால்** (வட்டியை தாங்கும் **வெங்கலத்தினால்** ஆன ஏந்தி) பயன்படுத்தப்படும். இங்கு தம்பதியினரால் மூன்று முறை உணவு ஊட்டப்படும். பின்னர் விருந்து உபசாரம் (பந்தி பரிமாறுதல்) நிகழ்வு இடம்பெறும். இதில் மாப்பிள்ளையினால் ஆண்களுக்கு விருந்து உபசாரம் இடம்பெறும். மேலும் அவரும் சபையில் இருந்து உணவு அருந்த வேண்டும். பின்னர் மணமகள் பெண்களுக்கு விருந்து உபசாரம் வழங்குவதுடன் அவரும் சபையில் இருந்து உணவருந்தல் வேண்டும் என்பது சம்பிரதாய நிகழ்வாகக் காணப்பட்டது. இத் திருமணங்கள் சாத்திரியார் (சோதிடர்) மூலம் நாள் குறித்து நடாத்தப்படும். அப்போது 'சீனியர்' எனும் சாத்திரியார் காணப்பட்டார். இவரே சுபநாள், சுப நேரம் கணித்து வழங்குவார்.

அக்காலத்தில் கலை நிகழ்வுகள் பொழுதுபோக்கு அம்சமாக நாட்டுக் கூத்து நடாத்துதல் இடம்பெற்றது. இது வடமோடி கூத்து வகையைச் சேர்ந்ததாகும். அக்காலத்தில் வட்டவான், நாசிவந்தீவு கிராமங்கள் இணைந்தே கூத்தினை நடாத்தினர். பிரதான அண்ணாவியாராக தி.வினாயகம் என்பவரும் மத்தள அண்ணாவியாராக **ப.மத்தையா** என்பவரும், சல்லாரி வாசிப்பவராக **க.கணபதி** என்பவரும் காணப்பட்டனர். முதலாவது நாட்டுக்கூத்தாக **"இராம நாடகம்"** இரண்டாவது நாட்டுக்கூத்தாக **அபிமன்யூ - சுந்தரிமலை** எனும் நாட்டுக்கூத்து இடம்பெற்றது. நாட்டுக்கூத்து கலைஞர்களாக **குமாரியன், சின்னையா, கணபதி, ஆறுமுகம், கணபதிப்பிள்ளை, செல்லத்தம்பி, கணபதி கோம்பன், வைரமுத்து,** குமாரவேல், முருகேசு ஆகியோர் காணப்பட்டனர்.

அக்காலத்தில் மந்திரவாதியாக **குமாரியன், சின்னத்தம்பி** ஆகியோர் காணப்பட்டதுடன், பாம்புக்கடி வைத்தியமும் செய்தனர். அவர்களையடுத்து **குமாரியன் சின்னையா, சின்னையா நல்லதம்பி** ஆகியோர் பாம்புக்கடி வைத்தியம்

செய்து வந்தனர். பிரசவத்தின் போது மருத்துவிச்சியாக கணபதி கறுப்பி என்பவர் காணப்பட்டார். நாசிவந்தீவில் பூர்வீக குடிகளாக குமாரியன், கணபதி, கணபதிப்பிள்ளை, சின்னான், கதிர்காமத்தம்பி ஆகியோர் காணப்பட்டனர்.

## தற்போதைய நாசிவந்தீவின் சமூக முன்னேற்றமும் அபிவிருத்தியும்

தற்போது நாசிவந்தீவு 375 குடும்பங்களும் 1188 தனி நபர்களும் காணப்படுகின்றனர், கல்வி , சுகாதாரம், சமூக அமைப்புக்கள், சுயதொழில், சமயஸ்தலங்கள், ஆன்மீகம் போன்ற துறைகளில் பாரிய முன்னேற்றம் காணப்படுகின்றன. இவற்றை தனித்தனியாக நோக்குவோமானால் கல்வியைப் பொறுத்தவரை முன்பள்ளி இரண்டு காணப்படுகின்றது. இதில் 33 மாணவர்களும் 4 ஆசிரியர்களும் காணப்படுகின்றனர். கலைமகள் முன்பள்ளியைப் பொறுத்த வரை கட்டிட வசதிகள் போதுமானதாகவும் தளபாடங்கள் போதுமான அளவும் காணப்படுகின்றது. துர்க்கா முள்பள்ளி புணரமைக்கப்பட்டு இயங்குகின்றது. பாடசாலையானது சுனாமியின் பின்னர் போதுமான அளவு கட்டிட வசதிகள் அமைக்கப்பட்டு (மூன்று மாடிக் கட்டிடம் 02, இரண்டு மாடி கட்டிடம் 02) அமைக்கப்பட்டு மேலும் ஆசிரியர்கள் தங்கி நிற்க தங்குமிடமும் கட்டப்பட்டுள்ளது. மேலும் இப்பாடசாலையானது சுனாமி, சூறாவளி, வெள்ளம் போன்ற அனர்த்தங்கள் ஏற்படும் போது மக்கள் பாதுகாப்பாக இடம் பெயர உதவுகின்றது.



இப்பாடசாலையில் தற்போது 273 மாணவர்களும் 16 ஆசிரியர்களும்

காணப்படுகின்றனர். இதுவரை சுமார் 28ற்கு மேற்பட்டோர் O/L பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர். 2 பேர் பட்டப்படிப்பை பூர்த்தி செய்துள்ளனர். பாடசாலைக்கென தனியான மைதானம் இல்லாவிடினும், பொது மைதானம் அண் மையில் காணப்படுவதனால் அதனைப் பயன்படுத்துகின்றனர். மேலும் இதில் **சித்திரைப் புத்தாண் டினை** முன்னிட்டு வருடா வருடம் கலை நிகழ்வுகளும், பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகளும் இடம்பெறும். (கயிறு இழுத்தல், வழுக்கு மரம் ஏறுதல், முட்டி உடைத்தல், தலையணை அடித்தல் தோணி ஓட்டம், ஒலை இழைத்தல் (கிடுகு), முட்டை மாற்றுதல், வினோத உடைபோட்டி, நீச்சல் போன்ற நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

இங்கு பொதுவான கட்டிடங்களாக தாய் சேய் நிலைய கட்டிடம், சிறுவர் கழக கட்டிடம், தும்பு நிலையம், ஆலயங்கள், மீனவர் கட்டிடம், கண்டல் தாவர கற்கை நிலையம் என்பன காணப்படுகின்றது. தாய் சேய் கட்டிடம் மூலம் சுகாதார பராமரிப்பு சேவைகள் மிக துரிதமாக மேற்கொள்ளப்



படுவதுடன் தனியாக குடும்ப நல உத்தியோகஸ்தர் ஒருவர் நியமிககப் பட்டுள்ளார்.

சிறுவர் கழக கட்டிடத்தில் சிறுவர்களுக்கான விளையாட்டுப் பொருட்கள் மற்றும் இசைக்கருவிகள் (உடுக்கை, ரபான், கரலா, மத்தளம், மெலடிக்கா) புத்தகங்கள் என்பன காணப்படுகின்றன.

பலநோக்கு மண்டபத்தில் கிராம சேவையாளர் அலு வலகம் அமைந் துள்ளதுடன், தும்பு அடித்தல் இயந்திரம், பனம்பாணி பிளியும் இயந்திரம், தும்பு கயிறு திரிக்கும் இயந்திரம் என்பன காணப்படுவதுடன். ஓர் அறையில் வாசிகசாலை செயற்பாடும் காணப்படுகிறது. இதனை பிரதேச சபை இயக்கி வருகிறது. இயந்திரங்கள், கட்டிடம் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தில் பொறுப்பில் காணப்படுகின்றது.

வாழ்வாதார அபிவிருத்திச் சங்கம் கட்டிடத்தில் மா அரைக்கும் இயந்திரம், சீமேந்துகட்டை வெட்டும் அச்சு 06 சமையல் பாத்திரம் (அண்டா), கதிரை என்பன காணப்படுகிறது. இது வாழ்வாதார அபிவிருத்திச் சங்கத்தின் பொறுப்பில் காணப்படுகிறது.

தும்பு தொழிற்சாலையினைப் பொறுத்தவரையில் 1955இல் இருந்து காணப்படுகிறது. யுத்தம் காரணமாக இயங்காது காணப்பட்டது. தற்போது சிறு கைத்தொழில் நிலையத்தினால் இயங்கி வருகின்றது. 01 ஆசிரியரும் 02 பயிற்சியளிப்பாளர்களும், 04 பயிற்சியாளர்களும் காணப்படுகின்றனர். இதுவரை 08 பேர் பயிற்சியினை முடித்துள்ளனர்.

இங்கு தற்போது ஆலயங்களாக கண்ணகியம்மன் ஆலயம் ஸ்ரீ கணேசர் ஆலயம், மாரியம்மன் ஆலயம், ஸ்ரீ முருகன் ஆலயம், பத்திர காளி அம்மன் ஆலயம் என்பன காணப்படுவதுடன் இவற்றுக்கென தனித்தனியான நிர்வாக சபைகளும் காணப்படுகிறது. மற்றும் நிர்வாக சபை மற்றும் பொதுமக்களின் பங்களிப்பினால் குறிப்பிடத்தக்க அளவு ஆலயங்கள் அபிவிருத்தியைக் கண்டுள்ளன. தற்போது பிரதம குருவாக திரு.வீ.வெற்றிவேல் அவர்கள் காணப்படுகின்றார்.

மேலும் நாசிவந்தீவில் தனியார் தோட்டங்களாக தென்னந்தோட்டம் காணப்படுவதுடன் உல்லாச விடுதி 02, உரைப்பை தொழிற்சாலை 01ம் காணப்படுகிறது. மேலும் துறைமுகத்தில் அதிகளவு மீன்பிடி இடம் பெறுகின்றது. சுமார் 24 படகுகளும் 92 தோணிகளும் காணப்படுகின்றது.

தற்போது பல இளைஞர்கள் யுவதிகள் வெளிநாட்டு வேலை வாய்ப்பிற்காக சென்றுள்ளதுடன் வெளி மாவட்டங்களான கொழும்பு, திருகோணமலை, புத்தளம், மன்னார் போன்ற பிரதேசங்களில் வேலைக்குச் சென்றுள்ளனர். மேலும் சுனாமியின் பின்னராக 282 கல் வீடுகளும் தேசத்தின் மகுடம் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 15 வீடுகளும் வெள்ள அனர்த்த வீட்டுத் திட்டம் மூலம் 14 வீடுகளும் கட்டப்பட்டுள்ளது.

தற்போது வெளிக் கிராமங்களான சுங்காங்கேணி, பேத்தாழை, வாழைச்சேனை, வட்டவான், சந்திவெளி, காயங்கேணி, வாகரை போன்ற கிராமங்களில் திருமண சம்பந்தம் மூலம் சமூக இணைப்பை ஏற்படுத்தியுள்ளனர். பொருளாதார ரீதியாகவும் நாகரிக ரீதியாகவும் வளர்ச்சியுற்ற இக் காலத்தில் பாரம்பரிய தொழினுட்ப முறைகள் வழிபாட்டு முறைகள் கலாசார பண்பாட்டு கட்டுப்பாடுகள் நிறைந்து காணப்படும் ஒரு கிராமமாக நாசிவந்தீவு கிராமம் திகழ்கின்றது.

தற்போது சங்கங்களாக கிராம அபிவிருத்திச் சங்கம், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம், மீனவர் சங்கம், வாழ்வாதார அபிவிருத்திச் சங்கம், முதியோர் சங்கம், விளையாட்டு கழகம், இளைஞர் கழகம் மற்றும் சிறுவர் கழகம் என்பன காணப்படுகிறது. இவற்றை காலத்திற்கு காலம் புணரமைத்து, பயிற்சிகள் வழங்கப்பட்டு இயக்கப்படுகிறது.

**தகவல் வழங்கியோர் :** வண்டன் முருகேசு
வேலிப்பிள்ளை சீனித்தம்பி
சீனித்தம்பி தங்கராசா
காத்தமுத்து வேலாத்தை
காளி வீரக்குட்டி.



சிறுகதை

கலாபூசணம் முத்துமாதவன்

# அப்புச்சி

ஆனி மாதத்தின் அழகிய நிலா ஒளி வீசும் ஒரு முன்னிரவு நேரத்தில் பங்குனியின் புழுக்கம் இன்னும் முடிவடையாமல் , வியர் வையால் உடல் நனைய நித்திரையின்றிப் புரண்ட நான் எரிச்சலும் அவதியும் கொண்டவனாக கதவைத் திறந்து வெளியே வர சில்லென்று உடல் மீது பரவிய இனிய காற்று "அ...ட...டா இயற்கையை வெல்ல செயற்கையால் முடியாது" எனக் கூறி இறுமாந்தது.

அப்போதுதான் அந்தப் பாடல் மிக மெதுவாகக் கேட்டது. இதயத்தை ஒரு நொடி யில் வசப்படுத்திய அந்தப் பாடலை அழுத்த மான சொல் உச்சரிப்போடு நாட்டுப்புற ராகம் பிசகாமல் மிக அழகாகப் பாடுவது வயது சென்ற ஒரு ஆணின் குரலாக தென்படவே வீட்டின் பின் புறமுள்ள வேலி ஓரம் நடந்து எட்டிப் பார்க்கின்றேன் அம்மன் காவியமாக இருக்க வேண்டும். "அமிர்த பரிபூரணி நள்ன விழி காரணி..." என்ற காவியம் சின்னஞ் சிறிய ஓலைக் குடிசைக் குள்ளிருந்து கேட்டது.

நான் ஒரு ஆசிரியன் இடமாற்றம் பெற்று மனைவியோடும் மகனோடும் நேற்றுத்தான் இந்தக்கேணியூருக்கு வந்து வாடகை வீட்டில் குடிபுகுந்தேன். விக்னேஸ்வரா வித்தியாலயம் பக்கத்திலேயே இருந்தது. நான் ஆசிரிய உலகத்தில் பெற்ற அரிய வரம் இதுவாகத் தான் இருக்க வேண்டும்.

இப்போதைய இளம் தலைமுறை யினர் அம்மன் காவியத்தை அறிய

வேண்டும். அதனை இசையோடு பாட வேண்டும் என்பதற்காக கிழக்குப் பல்கலைத்துறை பேராசிரியர் மதிப்பிற்குரிய மௌனகுரு ஐயா மாணவ, மாணவியரை இணைத்து பாரிய பணச் செலவின்றி உடுக்கு, மத்தளம், சல்லாரி, சிலம்பு, புல்லாங்குழல் போன்ற நாட்டுப்புற வாத்திய இசையோடு அம்மன் காவிய இறுவட்டுகளை வெளியிட்ட போது நமது சமூகம் நாளடைவில் மறந்தேவிட்டது !

சிவபுராணம், காவடிச்சிந்து, அம்மன் காவியம், பொன்னுஞ்சல், பாட்டு, திருப்புகழ், பட்டினத்தார் பாடல், திருவாசகம் இவைகளை இசையோடு இப்போது யார்? பாடுவது யாருக்குத் தெரியும். முதுமை கொண்டு முடங்கிக்கிடக்கும் முதியோரிடம் இருந்து தானே இவைகளை அறிய வேண்டும். அவர்கள் அறிவின் சுரங்க - மாகவே திகழ்கிறார்கள். எவ்வளவு நேர மாக பாடலில் வசப்பட்டு நின்றேனோ தெரியாது.

அந்த குடிசை இருளாக இருந்தது இடைக்கிடையே ! இருமலும்.... ஆ.... வென்று சத்தமாக கேட்ட கொட்டாவியுமாக பாடலின் சுருதி தேய்ந்துபோய்... "அடி... அடி... சீ...நாயே.... போ... போ..." என்று குரைத்த நாயை துரத்திய குரலோடு குடிசை நிஷ்பதமாயிற்று... மா மரத்தில்... தொங்கிய மாம்பழங்களை அணில்கள் சண்டையிட்டு பரபரத்து மரத்தில் ஏறி இறங்கி "விக்....விக் கென்று கத்தி.... கடித்துச்சாப்பிட்டன. இவைகளின் தொந்த ரவைப் பிடிக்காத மாங்குயில் ஒன்று.... சட சடத்து சிறகுகளை விரித்து "... கூக்..கூ..." என்று தன் மொழியில் திட்டியவாறு பறந்து போகிறது. இறைவன் படைத்த இயற்கை யின் அழகிய பரவசம்மிக்க காட்சிகளை உணர்வுகளின் உந்துதலால் கண்கள் படம் பிடித்து இதயத்தில் அடுக்கி வைத்திருப்பது ஒரு இலக்கிய வாதிக்கு ஏற்றது தானே...

காலையில் இந்தக் காவியத்தை பாடியவரைப் பார்க்க வேண்டும் என்ற ஆவலில்... வீட்டினுள் கனத்த மனதோடு நுழைந்து.... "ஏய்... மாயா... மாயா..." என்று. ஆழ்ந்த உறக்கத்தில் கிடந்த மனை வியை எழுப்புகிறேன் ஏதோ? கனவுகண்டு சிரித்துக்கொண்டு கிடநதவள் சட்டென்று முகத்தை கடுப்பாக்கி முறைத்து "என்ன?" என்றபடி பாதி விழிகளை அலுப்போடு திறக்கிறாள் மாயா.... பக்கத்து வீட்டில் ஒரு வயது போன ஐயா...அம்மன் காவியத்தை எவ்வளவு அழகாக "சே! என்ன? வசீகர மான குரல்! எழுத்துப் பிசகாத உச்சரிப்போடு பாடினார்" என்றேன் நான்.

"ஆ...தொடங்கிட்டீங்களா.... இலக்கிய புராணத்தை. இதைச் சொல்லத் தானா சாமத்திலா... எழுப்புறீங்க" என்றபடி முகத்தை அஷ்ட கோணமாக்கியபடி எழுநது கட்டிலிலிருந்து... கொண்டு மாயா சொல்கிறாள்,

"அவர் பெயர் ஆறுமுகம். ஆனா அவரை 'அப்புச்சி' என்றுதான் கூப்பிடுவாங்க. அப்புச்சி பேப்பர் பெக்டறியில வேலை செய்து ஓய்வு பெற்றபோது... இரண்டு வீடு தள்ளி ஒரு பெரிய வீட்டைக் கட்டியிருக்கிறார். பொஞ்சாதி செத்திட்டா. ஒரே ஒரு மகன். அவன் வங்கியில் வேலை செய்கிறான். அவன் கல்யாணம் செய்துவிட்டான். ஒரு பெண் பிள்ளையும் இருக்கு. ஏழாம் ஆண்டு படிக்குது. இவர் கட்டிய வீட்டில் அவங்க இருக்கிறாங்க. இவருக்கு வயது எண்பத் தெட்டு. இலக்கிய ரசிகர் கவிதை கதை எல்லாம் எழுதியிருக்கிறார்? நன்றாக ஓவியம் கீறுவார். பாட்டு எல்லாம் பாடுவார். ஆனா அப்புச்சிக்கு மனநோய். மூளை பிசகிட்டுது. அதனால தனியா இந்தக் குடில்ல போட்டிருக்காங்க. மன நோய் ஆஸ்பத்திரியிலிருந்து நேற்றுத்தான் வந்திருக்கார். மூச்சு விடாமல் அப்புச்சியின் எண்பத்தெட்டு வருட கால வாழ்வை எட்டு நிமிடங்களில் கூறியவளாக, "மாயா..... போதுமா ..." என்று கூறி நித்திரை மயக்கத தோடு கட்டிலில் சாய்ந்த மாயாவை வியப்பாகப் பார்க்கிறேன். அட..... ஒரு நாளைக்குள் சுற்றுப்புறத்தை எவ்வளவு தூரம்... அலசி விசாரித்திருக்கிறாள்.

"அது.... சரி.. மாயா..." என்று மீண்டும் எதையோ? கேட்க எத்தனித்த எனது குரலை அட ச்சீ... சும்மா படுங்க என்ட அவளது அதட்டல் அடக்கிவிட்டது. அப்புச்சிக்கு மன நோய் என்பதை ஏற்றுக் கொள்ள முடியாதவனாக "தொப்" என்று கட்டிலில் விழுந்து மகனை அணைத்துக் கொள்கிறேன்.

இன்று சனிக்கிழமை பாடசாலை இல்லை, அப்புச்சியை பேட்டி கண்டு விடுவது .... என்று நினைத்தபடி வேப்பங குச்சியை உடைத்து பல்லைத்துலக்கிய வாறு பின்புறம் சென்று..... எட்டிப் பார்க்க அழுக்கடைந்த ஒரு சாரணை இடுப்புக்கு மேலே மார்பு வரை இழுத்துக் கட்டியபடி நரைத்த தலைமுடி... முகமெல்லாம் வழிந்து தொங்க தாடி நீளமாய் அசிங்கமாய் முளைத் திருக்க கண்கள் இடுங்கி தோல் சுருங்கி உடல் மெலிந்து சற்று கூனியபடி நடந்து வந்த அந்த மனிதப் பிராணியைப் பார்த்து திடுக்கிட்டேன். "கடவுளே! இதுதான் அந்த காவியத்தின் ஓவியமா?.... இதென்ன? கொடுமை.

நான் பரிதாபத்தோடு பார்த்ததை அப்புச்சி கண்டிருக்க வேண்டும். முகம் முடிய நீண்ட தலைமுடியை கைகளால் வாரி, பின்னால் தள்ளியபடி ... மெதுவாய் உதடுகள் பிரித்து காவியேறி உடைந்து கிடக்க, பற்கள் தெரிய சிரித்தார். "அப்புச்சி... அப்புச்சி..! வாங்க எப்படி நல்லமா...." பல நாள் அவரோடு பழகியதைப் போல கேட்க, அப்புச்சி மாறாக அதே சிரிப்போடு வேலிக் கருகில் வர.... ஒரு துர்நாற்றத்தோடு ஆஸ்

பத்திரி மணமும் கப்பென்று சுவாசத்தை தாக்குகிறது.

அவர் என்னை மேலும் கீழுமாகப் பார்கிறார் அவரது கண்களில் ஏக்கமும் இயலாமையும் தெரிகிறது. கன்னங்கள் ஒட்டி வயிறு எக்கிப்போய் கிடக்கிறது. "தம்பி எனக்கு தேத்தண்ணீ கொஞ்சம் தாவன்" கைகள் தாடியை நீவு கின்றன..

ஓம்... ஓம்... தாரன். மாயா.... மாயா.... இரண்டு கோப்பையில ரீ கொண்டங்கப்பா... எனக்கும் அப்புச்சிக் கும்.... என்ற... சத்தமாக சொன்னபடி பைப்பில் வாயை கழுவி கொப்பளிக்கவும் மாயா ரீ யோடு நின்று.... அருவருப் போடு அப்புச்சியைப் பார்கிறாள்... மனம் சுளித்துக் கொள்கிறது மாயாவுக்கு என்னிடம் இரு கோப்பைகளையும் தந்து விட்டு.... என்னை... ஒரு விதமான எச்ச ரிக்கைப் பார்வையோடு நோக்கியவாறு சட்டென்று போக ஒரு கோப்பையை வேலிக்கு மேலால் நீட்ட மிகப்பவ்யமாக ஆவலாக முகம் சற்று மலர இரு கைகளையும் நீட்டி வாங்கிக் குடிக்கிறார். இவருக்கா மனநோய் .... எந்த மடையன் சொன்னவன்...தம்பி. நான் ஆறுமுகம். அவள்... பூரணி. அவதான் என்ட பொஞ்சாதி. செத்துட்டா... அவரது கண்கள் விரித்து தேங்கி நின்ற கண்ணீரை சொரிகின்றான். புழுதியில் பழுப் பேறிக் கிடந்த தாடி மீசையை கழுவிக் கொண்டு சொட்டுச் சொட்டாக வேறு ஒரு நிறத் தில்.... கண்ணீர் துளிகள் விழுகின்றன தேம்பித் தேம்பி. பிரியமுள்ள ஒன்றைத் தொலைத்துவிட்ட சிறுகுழந்தையின் ஏக்கம் கலந்த தேம்பல்

"தம்..பி.. அது... நான் கட்டின பென்னம் பெரிய வீடு.... பூரணி வாசா .... அவள்ற நினைவுகளோடு வாழ்ந்த என்ன.... இந்த ... குடிலுக்குள்ள இருட் டுக்குள்ள வெக்கைக்குள்ள .... என்ட மகனும் மருமகளும் கொண்டு வந்து போட்டுடாங்க.. குமுறி... ஒரு விரக்தியாய் கதைத்துக்கொண்டே ரீ யை குடித்த படி... வெறும் கோப்பையை தருகிறார்.

அவரது வளவின் வெளிப் படலையைத் தள்ளியபடி... வாட்டசாட்ட மான ஒரு இளைஞருடன் சிறு பிளாஸ்டிக் கோப்பையில் தேனீரும் பாண் துண்டு ஒன்றும் கொண்டு இன்னொருவரும் வருகின்றார். வேலி ஓரத்தில் நின்ற அப்புச்சியையும் மறுபக்கம் நின்ற என்னை யும் கண்டுகொண்ட அவர்கள் என்னருகே வர... நான் என்னை அறிமுகப்படுததினேன். இளைஞரும் சிரித்தபடி கை குலுக்கி... "சோ.. இது.. அப்பா ... முதல்ல நல்லா இருந்தாரு.

அம்மா செத்தபிறகு இப்படிட்டார்". குளிக்கிற இல்ல, முகம்கூட கழுவ மாட்டார். புது உடுப்புகள் நிறைய இருக்கு.... போடுற இல்ல. பாருங்க எப்படி நிற்கிறாரு.

.... எனக்கும் இவரால்.. வெளிய தலை காட்ட ஏலாமக் கிடக்கு.... றோட்டு வெழிய சும்மா திரிந்து மானம் மரியாதை எல்லாம் போகுது...." அழாக்குறையாக அவன் கண்ணில் நீர் பொங்க கூறுகிறான்.

அங்க பாருங்க சேர் கரண்ட் எடுத்து.... விளக்கும் போட்ட அதை உடைத்துப் போட்டாரு. கட்டில் கிடக்கு ஆனா மண்ணில கிடப்பாரு.... இது கூட வந்தவரின் பேச்சு.... மகனையும் மற்ற வரையும் பார்த்த அப்புச்சி... தேனீ ரையும் பாணையும் வாங்கி... தேனீரை ஒரே மூச்சில் குடித்துவிட்டு கோப்பையைத் துக்கி எறிந்தார். பாண் துண்டுகளைப் பிய்த்து காகங்களுக்குப் போட்டார்

பார்த்தீங்களா....சேர். இதுதான் பிரச்சினை...என்றவன் சற்று கோபத்தோடு சொன்னான் அப்பா இனியும் உங்கள வைச்சிருக்க ஏலாது .... நாளைக்கு அனாதை இல்லத்தில் கொண்டு போய் விடுறன் சரியா" என்றபடி "சேர் இதைவிட என்னால ஒன்றும் செய்ய முடியாது..." எனக் கூறிக்கொண்டே போகிறான் மகன்.

சத்தம் போட்டுச் சிரிக்கிறார் அப்புச்சி... "தம்பி... என்ட வீட்டுல எனக்கு சிறிய இடம் தராமா இஞ்ச கொண்டு வந்து போட்டுட்டு... எனக்குப் பைத்தியம் என்று பேரை வைச்சி .... எவ்வளவு கேவலமா? கொடுமையா அது தான் தம்பி எனக்கு கோபம். ஆத்திரத்தில்

**எனக்கும் இவரால்.. வெளிய தலை காட்ட ஏலாமக் கிடக்கு... றோட்டு வெழிய சும்மா திரிந்து மானம் மரியாதை எல்லாம் போகுது..."**

அவரது உடம்பு ஆடுகிறது ... நன்றி கெட்ட நாய்கள் .... அனாதை இல்லமா? எனக்கா... என்ட உழைப்பால இரத்தமும் வியர்வையும் சிந்தி, பேப்பர் பெக்றியில வைக்கோல் கட்டி இரவும் பகலும் எவ்வளவு கஷ்டப்பட்டு உன்னை வளர்த்து படிக்க வைச்சி, நாலுலட்சம் ரூபா கொடுத்து வேலைக்குச் சேர்த்து.... ஊரே புகழ பட்டதாரிப் பெண் ணைப் பேசி கலியாணம் முடிச்சி வைச்ச என்னையை அனாதை இல்லத்தில.... ஆ வென்று அழுகிறார் அப்புச்சி.

என்னால் ஒன்றும் பேச முடிய வில்லை. இவருக்கு எந்த நோயும் இல்லை... மகனதும் மருமகளதும் கொடுமை தான் காரணமாக இருக்க வேண்டும். நேரத்திற்கு உணவு கொடுக்காதது குடும்பத்தில் ஒருவராக எண்ணாதது திறமைக்கு மதிப்பளிக்காதது அலட்சியப் படுத்துவது தனிமையில் விடப்பட்டது.

...நான் ஊமையாகத் திரும்புகிறேன், "அப்புச்சி நீங்க குளிச்சிட்டு வேட்டி சட்டை போட்டு ஷேவ் எடுத்து வடிவா இருந்தா... ஒரு பிரச்சனையும் வராது என்றேன் அனுதாபமாக அழுகையை நிறுத்திய அவர் "ஓம் நான் இப்ப குளிக்கிறன்..." என்றபடி திரும்பி நடந்தார். "ஆனால் தம்பி... அனாதை மடத்துக்கு நான் போகமாட்டன்" என்று சத்தமிட்டார்.

லீவு நாளானபடியால் எனது மனைவி, மாயாவின் தாயின் வீட்டுக்கு வரச் சொல்லிருக்க, நாங்கள் புறப்பட்டு மட்டக்களப்பிற்கு சென்றுவிட்டோம். சனியும் ஞாயிறு பின்னேரம் வரை எனக்கு அப்புச்சியின் நினைவாகவே இருந்தது பாவம்.... அந்த மனுஷன் அம்மன் காவியத்தை பாட வைத்து ஒரு இறுவட்டு தயாரித்து அவரைப் பேட்டியெடுத்து பத்திரிகையில் பிரசுரித்து, சமூகத்தில் அவரைப் புகுத்தி விட்டால் ஒரு கனவானாக அவர் திகழ்வார் என்ற பலத்த சிந்தனையோடு... ஞாயிறு மாலை மட்டக்களப்பிலிருந்து புறப்பட்டு களுவாக்கேணி சந்தியில் இறங்கும் போது... வெள்ளைக்கொடியோடு அப்புச்சியின் முகம் அழகான முறையில் பிரிண்டிங் செய்யப்பட்டு கண்ணீர் அஞ்சலியாக கட்டப் -பட்டிருக்க நானும் மாயாவும் ஒரு கணம் துடித்து.... ஆட்டோவில் வீடு வந்து சேர்ந்ததும் அப்புச்சியின் ஏ.சி பூட்டப்பட்டிருந்த "பூரணி வாசல் "வீட்டுக்குள் குவிந்திருந்த சனக் கும்பலை விலைத்தியபடி போக, மாபிள் பதிக்கப்பட்டு அலங்காரப்படுத்தியிருந்த நடு மண்டபத்தில் தேக்குமரக் கட்டிலில் அதி விலை கூடிய வடிவு செய்யப்பட்ட பெட்டியில் தலைமுடி சீராக வெட்டப்பட்டு முகச்சவரம் செய்து பட்டு வேட்டி வெள்ளைச் சட்டை நெற்றி நிறைய திருநீறு சந்தனப் பொட்டிட்டு..... அழகிய பெரிய ரோஜா மாலை அணிந்து.... விரலல் மோதிரமும் தங்க முலாமிட்ட கைக் கடிகாரமும் ஒளி வீச...சமூகத்தின் உறவுகளின் முதியோர் -களின் அலட்சியப் போக்கையும் அவமதிப் பையும் தாங்க முடியாது நெஞ்சின் ஏக்கத்தால் மாரடைப்பு வந்து இறந்த அப்புச்சியின் மெல்லத் திறந்த உதடுகளும் உடைந்து காவியேறிய சிரிப்பூறிய பற்களும் முகமும் உலகிற்க்கு முக்கியமான தத்துவம் ஒன்றை கூறுவதாக எனக்குத் தென்பட எரிமலையாக உள்ளம் மௌனமாக எரிந்து வெடிக்க நான் ஊமையனாக அம்மன் காவியத்தின் சொத்தாக மிளிர்ந்த அப்புச்சியின் முகத்தை ஊன்றிப் பார்த்து கண்ணீர் கசிய வெளியேறுகிறேன்.

பெட்டியை மூடி அப்புச்சியை தூக்கிப் போகிறார்கள். சிவபுராணம் கேட்ப தையும் மீறி அப்புச்சியின் "அமிர்த பரி பூரணி நளின விழி காரணி..... "என்ற காவியம் ஒலிக்கிறது.

# கோறளைப்பற்றுப் பிரதேச கிராமிய விளையாட்டுக்கள்



K.சிவதர்சன்

## 1. அறிமுகம் :

"கல்தோன்றா மண்தோன்றா காலத்தே முன் தோன்றிய மூத்த குடி தமிழகுடி" என்பர். பண்பாடு, கலாசாரத்திற்குப் பேர் போனவர்கள் தமிழர்களே! அவர்களது கலைகளில் ஒன்றாகவே கிராமிய விளையாட்டுக்களும் காணப்படுகின்றன. தமிழ் இனம் எவ்வளவு தொன்மையானதோ அவ்வளவு தொன்மையமானது தமிழரின் கிராமிய விளையாட்டுக்களும், தமிழ் சமுதாயத்தின் நாகரிகம், பண்பாட்டோடு இணைந்த வகையில் கிராமிய விளையாட்டுக்களும் அமைந்திருந்தது.

'விளையாட்டு' என்பது ஆங்கிலத்தில் *'Play', 'Game', 'Sports'* எனும் சொற்களால் அழைக்கப்படுகின்றது. தமிழில் 'ஆடல்', 'ஆட்டம்', 'விளையாட்டு' என்று அழைக்கப்படுவது வழமை. பொதுவாக "மனமகிழ்ச்சி ஊட்டும் ஒரு செயலை" விளையாட்டு என வரைவிலக்கணப்படுத்த முடியும்.

## 2. விளையாட்டின் முக்கியத்துவம் :

மனித வரலாற்றை ஆராயும் போது முதலில் இயற்கையுடனும், பின்னர் விலங்குகளுடனும் போராட வேண்டியிருந்தது. இத்தகையதொரு போராட்டகரமான வாழ்க்கையிலே தன்னை நிலைநிறுத்திக் கொள்ளவும், வேட்டையாடலின் போது வில் முதலான கருவிகளைப் பயன்படுத்தவும், உடல் வலிமை மிக்கவனாக வாழ வேண்டிய தேவை ஏற்பட்டது. எனவே, அத்தகைய உடல் வலிமையைப் பெறுதலே விளையாட்டின் தோற்றமாக அமைந்து கொண்டது.

உடலை நன்றாக வைத்துக்கொள்ள "உடற்பயிற்சியும் விளையாட்டுடும் மிகவும் அவசியம்" என்பதும், "சிறந்த விளையாட்டின் மூலமே நோயில்லாத வாழ்க்கையை வாழமுடியும்" என்பதும் நாம் அறிந்த உண்மையே.



ஓடி விளையாடு பாப்பா - நீ
ஓய்ந்திருக்கலாகாது பாப்பா
கூடி விளையாடு பாப்பா - ஒரு
குழந்தையை வையாதே பாப்பா....
காலை எழுந்தவுடன் படிப்பு - பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு
மாலை முழுவதும் விளையாட்டு - என்று
வழக்கப்படுத்திக்கொள்ளு பாப்பா....

குழந்தைப் பருவத்தில் விளையாட்டு எவ்வளவு முக்கியமானது என்பதையும், மாலை நேரங்களில் குழந்தை கட்டாயமாக விளையாட வேண்டும் என்பதையும் பாரதியார் இப்பாடலில் வலியுறுத்தியுள்ளார். குழந்தைகளுக்கான எந்தவொரு செயற்பாட்டிலும் விளையாட்டு முக்கியமானது. விளையாட்டின் மூலமாகக் கற்பதனால் குழந்தை எதையும் விரும்பிக் கற்கின்றது.

சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் விருப்புடன் ஈடுபடும் ஒன்றாக விளையாட்டுக்கள் காணப்படுகின்றன. அகமகிழ்வும், உடல் ஆரோக்கியமும் இதில் அடங்கியிருக்கின்றது.

விளையாட்டில் ஈடுபடும் போது தமது கவலை, துன்பம் என்பவற்றை மறந்து சந்தோசமாக ஈடுபடுவதனால் துக்கங்களை மறக்கச் செய்கின்றது.

- விளையாட்டை விடையாடுபவர்களுக்கு ஏற்படுகின்ற திருப்தி போலவே பார்ப்பவர்களுக்கும் உளத் திருப்தியும், சந்தோசமும் ஏற்படுகின்றது.
- பலர் சேர்ந்து விளையாடுவதனால் மன அழுத்தம் குறைகின்றது.
- தோல்வியைத் தாங்கிக்கொள்ளும் மனப்பக்குவம் வளர்வதோடு நோய் எதிர்ப்பு சக்தியும் உருவாகின்றது.
- ஓடி விளையாடும் போது இரத்தம் தூய்மை பெற்று இரத்த ஓட்டமும் சுறுசுறுப்பாகின்றது. அதுமட்டுமல்லாது உடலின் தசைநார்கள் தொழிற்பட்டு, வலுவடைகின்றன.
- சமூக ஒற்றுமைக்கு வழியமைப்பதோடு நேர முகாமைத்துவமும், திட்டமிடல் எனும் பண்புகளும் விளையாட்டின் மூலம் வளர்கிறது.

### 3. கிராமிய விளையாட்டுக்களும் கோறளைப்பற்று பிரதேசமும் :

கிராமிய விளையாட்டிற்கும், கிராமிய பண்பாட்டிற்கும் நெருங்கிய தொடர்புண்டு. கிராமிய விளையாட்டுக்கள் எப்போதும் 'மண்வாசனை' நிரம்பியதாகவே காணப்படும். கிராமங்களில் காணப்படும் நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள், தொழில், சமயம், பால் என்பவற்றிற்கு ஏற்ப கிராமிய விளையாட்டுக்கள் அமைந்துள்ளன.


கிராமிய விளையாட்டுக்களை விளையாடவென பிரத்தியேகமான இடங்கள் தேவையில்லை. இது வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்து அன்றாட நிகழ்வோடு சம்பந்தப்பட்டதாகக் காணப்படுகின்றது. வீட்டின் முற்றமும், வளவும் (காணியும்) பாரம்பரிய விளையாட்டுக்கான களங்களாகக் காணப்படுகின்றன.

தமிழர்களின் வீரத்தைப் பறை சாற்றுவதற்கான விளையாட்டுக்கள் சங்ககாலம் தொடக்கம் தமிழர் மத்தியில் காணப்பட்டு வந்துள்ளது. இன்றும் சில கிராமங்களில் பண்டிகைக் காலத்தில் இவ்விளையாட்டுக்கள் நிகழ்த்தப்படுகின்றமை சிறப்பிற்குரியதாகும். முக்கியமாகக் கோறளைப்பற்றுப் பிரதேசத்தில் பண்டிகைக் காலங்களில் தமிழரின் பாரம்பரிய விளையாட்டுக்கள் ஒழுங்கமைக்கப்பட்ட நிகழ்வுகளாகவும், ஒழுங்கமைப்படாத நிகழ்வுகளாகவும் நிகழ்த்தப்படுவதனைக் காணலாம்.

கலை, கலாசார, பண்பாட்டு விடயங்களுக்குப் பேர்போனது கோறளைப் பற்றுப் பிரதேசமாகும். கோறளைப்பற்று என்பதில் கோறளை என்பது கோரைப்புற்கள் அதிகம் கொண்ட ஓர் பரந்த நிலப்பரப்பினையும் பற்று என்பது நாகரிகமடைந்த மக்கள் கூட்டம் வாழ்ந்ததையும் குறித்து நிற்கின்றது. எனவே, கோரைப்புற்கள் கொண்ட ஒரு பரந்த நிலப்பரப்பிலே நாகரிகமடைந்த மக்கள் கூட்டம் கிராமங்களை அமைத்து வாழ்ந்தமையினால் இப்பிரதேசம் கோறளைப்பற்று என அழைக்கப்படுகின்றது. தற்போது கும்புறுமூலை தொடக்கம் நாசிவன்தீவு வரையிலான பகுதி கோறளைப் பற்றுப் பிரதேசத்தில் உள்ளடங்கியுள்ளது.

## அடையாளங் காணப்பட்ட கிராமிய விளையாட்டுக்கள்

- கிட்டிப்பொல்லும் (கிட்டிப்புல்லு)
- ஊஞ்சல் விளையாட்டு
- வட்டக் கபடி
- சங்கு விளையாட்டு
- சுரக்காய் விளையாட்டு
- ஆலாபறத்தல் விளையாட்டு
- கிளளிக் கிள்ளிப் பிராண்டி விளையாட்டு
- எவடம் எவடம் விளையாட்டு
- கிளித்தட்டு
- கொக்கரக்கோ விளையாட்டு
- நொண்டி விளையாட்டு
- கபடி (சடுகுடு) விளையாட்டு
- தாயக்கட்டை விளையாட்டு
- பல்லாங்குழி விளையாட்டு
- உச்சரிப்பு விளையாட்டு
- பசுவும் கன்டும் எங்கே? விளையாட்டு
- கொத்திருக்கா கொத்து விளையாட்டு
- கோட்டுப்பந்து விளையாட்டு
- போர்த்தேங்காய்
- நாயும் புலியும் விளையாட்டு
- பம்பரம் விளையாடுதல்
- பட்டம் விளையாடுதல்





கோறளைப்பற்று இத்தகைய கிராமிய விளையாட்டுக்கள் காணப்படுகின்ற போதிலும், இன்றைய நிலையில் இவ்விளையாட்டுக்கள் அருகி, வழக்கொழிந்து கொண்டு போவதனைக் காணலாம். இவ்விளையாட்டுக்களைப் பாதுகாத்து, புத்துயிர் கொடுப்பதன் மூலம் தமிழர் பாரம்பரியங்களைப் பாதுகாக்க முடியும்.

இவ்விளையாட்டுக்களை எடுத்துக்கொண்டால் வெறுமனே விளையாட் -டுக்கள் மட்டுமல்ல, பாடல்களும் இதனோடு இணைந்தாகக் காணப்படுகின்றது. இத்தகைய கிராமிய விளையாட்டுக்களை விளையாடும் முறை பற்றி சற்று விரிவாகப் பார்ப்போம்.


## (i) கிட்டியும் பொல்லும் (கிட்டிப்புல்லு)

கிராமங்கள் தோறும் விளையாடப்பட்டு வந்த பழம் பெரும் விளையாட்டுக்களில் ஒன்றாக கிட்டிப்புல்லு அடித்தல் காணப்படுகின்றது. இது பெரும்பாலும் சிறுவர்களாலே விளையாடப்படும். இது ஒரு குழு விளையாட்டாகும். இதில் இரு குழு பங்குகொள்வர். எந்த குழு முதலில் விளையாடுவது என்பதனை நாணயத்தை சுண்டித் தீர்மானிப்பர்.

இவ்விளையாட்டின் போது இரு கம்பு பயன்படுத்தப்படும். பெரிய கம்பு 'தாய்க்கம்பு' எனவும் சிறிய கம்பு 'கிட்டி' அல்லது 'குட்டிக்கம்பு' எனவும் அழைக்கப்படும் 'கிட்டி'யின் மூன்று மடங்காக தாய்க்கம்பு காணப்படும்.

கெட்டியான தரையில் ஒரு குழியைத் தோண்டி கிட்டிப்புல்லை வைத்து தாய்க் கம்பினால் உயர்த்துவார்கள். மற்றைய குழுவினர் அதைப் பிடிக்காவிட்டால் குழியை நோக்கி கிட்டியை எறியர். எறியும் போது உத்தியவர் தடுத்து அடிகக வேண்டும். தடுக்காவிட்டால் அவர் ஆட்டத்திலிருந்து விலகுவார். தடுத்தால் அவரால் தடுத்த அடிக்கப்பட்ட தூரத்திற்கு ஏற்ப அளந்து. எடுப்பார். அவ்வாறு ஒவ்வொருவரும் விளையாடும் போது குறிப்பிட்ட பெறுமதியைப் பெற்ற பின்னர் 'பாட்டம்' இடம்பெறும்.

வென்றவர்கள் குழியிருந்து கிட்டியை அடிப்பர். மற்றைய குழுவினர் கிட்டியை கைகளில் பிடித்து மூச்சுவிடாமல் பாடிக்கொண்டு குழியை அடைய வேண்டும். இதற்கு பின்வரும் பாடல்களைப் பாட வேண்டும்.




ஆலையிலே சோலையிலே
ஆலங்காடி சந்தையிலே
கிட்டிப்புல்லும் பம்பரமும்
கிறுக்கியடிக்க பாலாறு.....
பாலாறு...... பாலாறு.....

மாம்பட்ட மதுரம்பட்ட
வெளவால் ஓடிய தென்னம்பட்ட
பூ ம்பட்ட புலியம்பட்ட
பட்டனோம்.......பட்டனோம்.......

இவ்விளையாட்டின் போது மூச்சுப் பயிற்சியினை சிறுவர்கள் மேற்கொள்ள முடிவதோடு ஓசை நயத்துடனான பாடல்களை இனிமையாகப் பாடவும் வாய்ப்பு ஏற்படுகிறது.

## (ii) உச்சரிப்பு விளையாட்டு

இது சிறுவர்கள், இளைஞர்கள் கூட்டமாக இருந்து விளையாடும் விளையாட்டாகும். இவ்விளையாட்டானது உச்சரிப்பு மற்றும் முறையாகச் சொற்பிரயோகங்களைக் கையாள்வதற்கான சந்தர்ப்பத்தினை ஏற்படுத்துகிறது. இவ்விளையாட்டின் போது பின்வரும் பாடல்கள் உச்சரிக்கப்பட்டு திரும்பத் திரும்ப உச்சரித்து விளையாடப்படும்.



பிட்டும் புதுப்பிட்டு
தட்டும் புதுத்தட்டு
பிட்ட கொட்டி
தட்டத் தா

ஓடுற நரியில ஒரு நரி கிழநரி
கிழநரி முதுகில் ஒருபிடி
நரமயிர்

## (iii) சங்கு விளையாட்டு

சங்கு விளையாட்டானது பெரும்பாலும் நிலாக்காலங்களில் முற்றங்களிலும் மரத்தடி நிழல்களிலும் சிறுவர்கள் பலர் சேர்ந்து விளையாடப்படும்.

இவ்விளையாட்டின் போது சிறுவர்கள் வட்டமாக இருந்து கைகளைப் பொத்தி ஒருவர் கை மேல் ஒருவர் கை என அடுக்குவர். இதற்கு தலைமை தாங்குபவர் தனது ஒரு கையை மட்டும் அடுக்குவார்.

தலைமை தாங்குபவர் தனது அடுக்காத கையினால் அடுக்கப்பட்டிருக்கும் கைகளைச் சுட்டிக்காட்டி 'இது யார் சங்கு?' எனக் கேட்க குழுவில் இருக்கும் ஒவ்வொருவரும் 'அம்மா சங்கு', 'அப்பா சங்கு' என உறவு முறைகளைக் கொண்டு பதில் சொல்வர். அடுக்கப்பட்டிருக்கும் அனைத்துக் கைகளும் யார் சங்கு என்று சொன்னவுடன் தலைவர் "வெட்டவா? தீட்டவா?" என்று கேட்பார். கையால் கலைத்துவிட அனைவரும் கைகளை எடுத்து வாயில் வைத்து "ஊ......... ஊ........." என உரத்து ஓசையிடுவர்.

இதற்கான பாடல் பின்வருமாறு அமையும்.

இது யாரு சங்கு?
அம்மா சங்கு
இது யாரு சங்கு?
அப்பா சங்கு?

இது யாரு சங்கு?
அண்ணா சங்கு
இது யாரு சங்கு?
அக்கா சங்கு
இது யாரு சங்கு?
தம்பி சங்கு?
இது யாரு சங்கு?
தங்கை சங்கு
இது யாரு சங்கு?
மாமா சங்கு



### (iv) ஆலாப்பற பற விளையாட்டு

இவ்விளையாட்டில் சிறுவர்கள் முற்றத்தில் சேர்ந்து வட்டமாக இருப்பார். அனைவரும் கைகளை விரித்து உள்ளங்கை நிலத்தில் பட வைத்து கைகளை அடுக்குவர். பின்னர் ஒருவர் "ஆலாப்பற பற" எனப் பாடும் போது கைகளை மேல் நோக்கி உயர்த்தி விளையாடுவர். இவ்விளையாட்டின் போது பின்வரும் பாடல்களைப் பாடுவர்.

ஆலா பற..... பற....

ஆலாக்குஞ்சி பற..... பற.....

கொக்கு பற...... பற.....

கொக்குக்குஞ்சி பற....... பற......

குருவி பற..... பற......

குருவிக்குஞ்சு பற...... பற.....

கோழி பற...... பற.....

கோழிக்குஞ்சி பற...... பற.....



### (v) கபடி (சடுகுடு) விளையாட்டு

சங்ககாலம் தொட்டு விளையாடப்பட்டு வந்த இவ்விளையாட்டு மிகவும் தொன்மையானது. இன்று "கபடி விளையாட்டு" எனும் பெயரில் தேசிய ரீதியான ஒரு குழு விளையாட்டாக இலங்கை அரசினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இவ்விளையாட்டில் இரு அணியினர் இடம்பெறுவர். ஒரு அணியை சேர்ந்தவர் அணியின் ஆடுகளத்திற்குள் சென்று மூச்சுவிடாமல் பாடிக்கொண்டு எதிரணியில் உள்ளவர்களைத் தொட்டுவிட்டு ஆடுகளத்திற்குள் வரவேண்டும் எதிரணியினர் பாடுவோரை வெளியேற விடாமல் சுற்றிப் பிடித்துவிட்டால் அவர் ஆட்டத்தில் இருந்து வெளியேற்றப்படுவார்.

இவ்விளையாட்டின் போது பின்வரும் பாடல் பாடப்படும்.



கபடி அடிக்க கபடி அடிக்க
கைகால் முறிய கைகால் முறிய
காலுக்கு மருந்து தேடிக்கட்டு.......
தேடிக்கட்டு.... தேடிக்கட்டு.... தேடிக்கட்டு..

ஆனால் அண்மைக் காலங்களில் இவ்விளையாட்டின் போது "கபடிக்....... கபடிக்.... கபடிக்....." எனும் பாடலே பாடப்படுகின்றது.

## (vi) ஊஞ்சல் விளையாட்டு

அனைவரும் இவ்விளையாட்டில் பங்குகொள்வர். இது பெரும்பாலும் விசேட தினங்களில், குறிப்பாக தைப்பொங்கல், சித்திரைப் புத்தாண்டு, சிவராத்திரி போன்ற காலங்களில் விளையாடப்படும். பெண்களால் அதிகமாக விரும்பி விளையாடப்படும் விளையாட்டாக இது காணப்பட்டது.

மாமரம், புளியமரம், வேம்புமரம் முதலான பெரிய மரங்களில் ஊஞ்சலினைக் கட்டி விளையாடுவர்.

நேரேபோ..... ஊஞ்சில் நேரேபோ...
நேற்றடித்த காத்தோடபோ.......

தொத்தாதே....ஊஞ்சில் தொத்தாதே...
தொந்து பலகாரம் சுட்டுத்தாரேன்....

ஒரு கொத்து ஈச்சங்கொட்ட
வறுத்துக் குத்தி
ஒன்பது பேரும் சேர்ந்து குத்தி
கல்லோ மண்ணோ கலந்து குத்தி
கல்லடி நாச்சிக்கு கலியாணமாம்.....

ஏறம்மா வண்டியில......
இறக்கி விடுறன் சந்தியில......




இவ்வாறு பாட்டோடு பலரும் விளையாடி வந்த கிராமிய விளையாட்டுக்கள் பலவுண்டு. அனைத்து விளையாட்டுக்களும் விளையாடும் முறை பற்றி விளக்கப்படாவிட்டாலும் சில விளையாட்டுக்களையாவது தெளிவாக விளக்கி உள்ளேன். இவ்விளையாட்டுக்களை ஓய்வான நேரங்களில் விளையாடுவதன் மூலம் விளையாட்டின் மூலம் கிடைக்கும் பயன்களைப் பெறுவதோடு தமிழரின் பாரம்பரியத்தினைப் பேணவும் முடியும்.


## 4. கோறளைப்பற்று கிராமிய விளையாட்டுக்களின் இன்றைய நிலை

விருதுக்கு மட்டும்தான் விளையாட்டு என்று ஆகிவிட்டதனால் விரும்பிய சிலர் மட்டுமே விளையாட்டைப் பயில்கின்றனர். மேல்நாட்டவர் வருகையினால் மேல்நாட்டவர் விளையாட்டுக்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு கிராமிய விளையாட்டுக்கள் மறைந்து மருவிக்கொண்டு வருகின்றன. குறிப்பாக கிரிக்கெட், உதைப்பந்தாட்டம். மென்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம், கொக்கி, பெற்மின்ரன் எனும் மேலைத்தேய விளையாட்டுக்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்படுகின்றது.

வேறினத்தவர்களின் கலைகளை வெறித்தமாக ஏற்கும் தமிழர்கள், வேரூன்றிய தம் கலைகளை வெட்கமென விட்டுவிடுகின்றனர். தொலைபேசி, கனிணி போன்றவற்றில் விளையாட்டுக்களை விளையாடும் நிலைக்குத் தள்ளப்பட்டுளளனர்.



சிறுவர்களுக்கு சேர்ந்திருக்கவோ விளையாடவோ நேரம் இருப்பதில்லை. பாடசாலை, மாலைநேர வகுப்புக்களும் என்றாகி விட்டது. இப்பிரதேச சிறுவர்கள் அனைவரும் ஒன்றாக சேர்ந்து விளையாட முடியாத அர்த்த மற்ற வாழ்க்கைக்குத் தள்ளபட்டுவிட்டனர். இன்றைய கல்விமுறை பறித்துக்கொண்ட முக்கியமான ஒன்று விளையாட்டு. எங்கே போனது சிறுவர்களின்




குறும்பத்தனமான விளையாட்டுக்கள் என்று பார்த்தால் கல்விக்கு மட்டும் காலத்தை செலவழிக்கும் நிலையே, விழுங்கிவிட்டது என்பது புலனாகும்.

ஆனாலும் முற்றுமுழுதாகக் கிராமிய விளையாட்டுக்கள் மறைந்து போகவில்லை. கோறளைப்பற்று பிரதேசத்தின் சில கிராமங்களில் பல விளையாட்டுக்கள் இன்றும் காணப் படுகின்றன. பல கிராமங்களில் அவை அருகிவிட்டன. பெரும்பாலும் சித்தி ரைப் புத்தாண்டுக் காலங்களில் சில கிராமிய விளையாட்டுக்கள் விளையா டப்படுகின்றன.

## 5. முடிவுரை

மேற்கூறிய விடயங்களை வைத்துப் பார்க்கும் போது கிராமிய விளையாட்டுக்கள் காணப்பட்டதும் அது இன்று அருகிக் கொண்டு செல்வதும் தெளிவாகின்றது. படித்த சமூகத்தை மட்டும் உருவாக்க நினைக்கும் பெற்றோர்கள் பிள்ளைகளது உடலாரோக்கியத்தையும் மனக்குதூகலிப்பையும் தரும் கிராமி விளையாட்டுக்களை மறைந்தவிட செய்து விட்டனர்.

இத்தகைய பயன்தரும் கிராமிய விளையாட்டுக்களை கோறளைப்பற்று பிரதேசத்தில் மீண்டும் புத்துயிர் கொடுக்க வேண்டும். கல்வியோடு விளையாட்டும் முக்கியமானது எனும் நிலை உணரப்பட வேண்டும். இதற்காக போட்டிகள் நடாத்தப்பட வேண்டும் இல்லையெனின் கிராமிய விளையாட்டுக்களா? அப்படி என்றால் என்ன? என்று எதிர்கால தமிழ் சமூகம் கேட்கும் நிலை உருவாகி விடும். எனவே இந்நிலையினை மாற்றி தமிழரின் கிராமிய விளையாட்டுக்களைப் புத்துயிர் பெற வைப்பது ஒவ்வொரு தமிழரினதும் கடமையாகும்.



# சித்த மருத்துவமும் அதன் சிறப்பம்சமும்

தொகுப்பு : திருமதி .அருணா ஜெராட் ஜோசப்

இயற்கையான இவ் அதிசய உலகில் இலை மறை காயாக ஒழிந்து கிடக்கும் மருத்துவ மூலிகைகள் பற்பல. இவ்வாறு மறைந்து கிடக்கும் மருத்துவ மூலிகைகளின் குண இயல்புகளையும் சிறப்பம்சங்களையும் உலகிற்கு வெளிக்கொணர்ந்த பெருமை சித்த மருத்துவ முறைக்கும் அதனை சுத்தியான முறையில் கையாளும் சித்த மருத்துவங்களையே சாரும். சித்தர்களால் உருவாக்கப்பட்ட இவ் மருத்துவ முறையானது உலகெங்கும் பரப்பப்பட்டு எமது பிரதேசங்களிலும் பழமையான மருத்துவமாக போற்றப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டு வருவது எம் மண்ணிற்கே பெருமையாகும்.

இதனடிப்படையில் எமது கோறளைப் பற்று வாழச்சேனை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட சித்த வைத்தியர்களினால் பலதரப்பட்ட நோய்கள் குணமாக்கப்படுவதும் பழமை பேணப்படுவதும் பிரதேசத்தின் பெருமையாக கூறலாம் இதற்கமைவாக பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட சித்த வைத்தியர் களினால் எமது நாளர்ந்த பாவனைக் குட்படுத்தப்படும் மூலிகைகளைக் கொண்டு எவ்வாறு எமக்கேற்படும் ஒரு சில நோய்களை தீர்த்துக் கொள்ளலாம் எனும் வழி முறைகள் பின்வருமாறு.

- **உடலில் ஏற்படும் சொறி சிரங்கு நீங்க :**

வேம்புமரம் ஆயுர்வேதத்தின் ஒரு அருமருந்தாகும் வேம்புமரம் சிறந்த மருத்துவ குணமுடையது முத்திய வேம்பு மரப்பட்டையை பொடி செய்து ஒரு மேசைக் கரண்டி வீதம் அதே அளவு பனங்கற்கண்டு சேர்த்து ஒரு மண்டலம் சாப்பிட்டு வர உடம்பில் உள்ள சொறி சிரங்கு போன்ற வியாதி நீங்கி பூரண சுகம் கிடைக்கும்.

- **அம்மன் நோய் நீங்க :**

ஊரோடி என்று அழைக்கப்படும் அம்மன் நோய்க்கு வேம்பு இலையை அரைத்து பூசி வேம்பு துளிர் இசங்கு கறபூர வள்ளி நாவற் துளிர் கற்கண்டு சின்ன வெங்காயம் சேர்த்து அரைத்து மூன்று அல்லது ஐந்து அல்லது ஏழு நாட்கள் உட் கொடுக்க அம்மன் நோய் பூரண குணமடையும்

சுப்பிரமணியம் புலேந்திரராசா (ஐயா)
ஆயுர்வேத வைத்தியர். வாழைச்சேனை.

- **நட்டுவக்காலி , தேள், பூரான், ஆறுபுள்ளி மென் சிலந்தி, குளவி தீண்டினால் :**

மஞ்சள் மிளகு பிண்ணாக்கு மூன்றையும் பொடி செய்து புகை பிடித்தல்

- **புலி முகச் சிலந்தி குத்தினால் :**

வௌவால் ஒட்டி இலையும் இலுப்பை பிண்ணாக்கும் இடித்து கட்டி பனைவேர் வசம்பு உள்ளி அரைத்து இள வெந்நீரில் குடிக்க கொடுத்தல் வேண்டும்

- துவாலைப்புடையன், மண்டலி, வழலை கடித்தால :

நாகதாளி வசம்பு சம அளவு நறுக்கி அரைத்து வீக்கத்தில் பூச வேண்டும்

- நல்ல பாம்பு கடித்தால்

வாகம்பு மிளகு சுக்கு, இந்துபூ , திப்பிலி இவைகளை பாக இலைச்சாற்றில் அரைத்து உலுக்கு கொடுத்தல்.

கந்தன் யோகமாணிக்கம்
விசகடி வைத்தியர் - சுங்கான்கேணி

➢ தலையிடி

கீழ்காய் நெல்லி எடுத்து சப்பி சாறு விழுங்க தலையிடி குணமாகும். அல்லதுஅருகம் புல்லை பசுப்பால் விட்டு அரைத்து நெற்றி கன்னம் ஆகியவற்றில் பூச வேண்டும்.

➢ தலை சுற்று

கையாந்தகரையை பசுப்பால் சேர்த்து விடிய காலையில் உச்சம்தலையில் தப்பி இரண்டு அல்லது மூன்று மணித்தியாலங்கள் தலையில் ஊற வைத்த பின்னர் முழுக வேண்டும்.

➢ கால் வீக்கம்

சாலம்பை பட்டையை மஞ்சள் சேர்த்து இடித்து தண்ணீர் விட்டு பிழிந்து வீக்கம் உள்ள இடத்தில் காய்ச்சியும் பூசலாம் அல்லது இலேசாக சூடு காட்டியும் பூசலாம்.

**முத்துப்பிள்ளை கணபதிப்பிள்ளை**
ஆயுர்வேத வைத்தியர், கல்குடா.

➢ உடலில் நோ

ஆற்றுமணலை ஓட்டில் போட்டு வறுத்து வெள்ளைப்பூடு வாழைக்குருத்து (விரியாத) போன்றவற்றை தண்ணீர் விட்டு அரைத்து நோ உள்ள இடத்தில் பூசினால் நோ நீங்கும்.

➢ உலுக்கு

புளிய இலையை மஞ்சள் சேர்த்து அவித்து அந்த தண்ணீரால் உலுக்கு ஏற்பட்ட இடத்தில் கழுவ வேண்டும் பின்னர் இலையை பிசைந்து எடுத்து தாங்கக்கூடிய சூட்டோடு இரவில் கட்ட வேண்டும் பின்னர் காலையில் அவிழ்க்க வேண்டும் இவ்வாறு மூன்று நாட்களுக்கு தொடர்ந்து செய்ய உலுக்கு அற்றுப்போகும்.

➢ தடுமல் தலைப்பாரம்

தேசிக்காயிலையை அவித்து அதே அடுப்புக்குள் மூன்று செங்கல்

துண்டுகளை போட வேண்டும் பின்னர் குறித்த நபரை முற்றாக மூடி ஆவி பிடிக்க வேண்டும். ஆவியினுடைய சூடு குறைய அடுப்பினுள் இருந்த செங்கல் துண்டுகளை பானையினுள் இட்டு அதில் வரும் ஆவியைப் பிடிக்க வேண்டும் . இவ்வாறு இரண்டு அல்லது மூன்று இரவுகளில் தொடர்ந்து செய்தல் வேண்டும்.

**கணபதிப்பிள்ளை நேமிநாதன்**
ஆயுர்வேத வைத்தியர், கல்குடா.

- **சில் விஷங்கள்**

  வண்டு, கொள்ளி, வால், மிளகு அரைத்து பூசுதல் வேண்டும்

- **நாள்ப்பட்ட விஷங்கள் (நாய் குரங்கு பூனை கடித்தல்)**

  அகுறி வேர் அரைத்து சிறு வடகங்களாக உலர்த்தி வைத்திருந்து நாளொன்றுக்கு ஒரு தடவை ஒரு வடகம் பசுப்பாலில் கலந்து அருந்தவும்.

- **வண்டு தேள் கடித்தால்**

  குப்பைமேனி, மிளகு அரைத்து பூசுதல் வேண்டும்.

**முத்துலிங்கம் சண்முகம் குருக்கள்**
ஆயுர்வேத வைத்தியர். பேத்தாழை.

- **இருமல்**

  சுக்கு மிளகு அக்காரம் கடுக்காய் தோல ¼ பங்கு எடுத்து ½ கப் தண்ணீரில் வற்றும் வரை காய்ச்சி பசுப்பாலும் பனங்கற்கண்டும் சேர்த்து காலை மாலை சாப்பிட வேண்டும்.

- **மூல வியாதி**

  திராய் தேங்காய் பூ வெங்காயம் துவைத்து சாறு பிழிந்து ஒரு பிடி அரிசியை கஞ்சி காய்ச்சி கித்துள் பனங்கட்டி போட்டு குடிக்கவும்.

- **தொடர்ச்சியான விக்கல**

  மாதுளம் பழம் சாறு எடுத்து திப்பிலியை தூள் ஆக்கி மாதுளம் சாறுடன் அதனை தேன் விட்டு குடித்தால் விக்கல் நீங்கும்.

- **பல் வலிக்கு**

புன்னைப்பட்டை சாறு, வேர்க்கொம்பு தூள் மதுசாரம் ஆகியவற்றை சேர்த்து சூடு காட்டி தாங்கக் கூடிய சூட்டோடு பல் வலி உள்ள பக்கத்தில் கன்னத்தில் பூச வேண்டும்.

- **தலைக்குத்து**

இஞ்சி சந்தனம் உள்ளி அரைத்து முலைப்பாலில் கலந்து தலையில் பூசுதல் வேண்டும் .

- **மூல கடுப்பு**

பசுப்பாலில் எலுமிச்சம் சாறு விட்டு குடிக்க வேண்டும்

- **முகப்பரு**

கரும் துளசி சாறு பிழிந்து பூசலாம் அல்லது வேப்பம் துளிரை இரவில் அவித்து வைத்து காலையில் அந்த தண்ணீரால் முகத்தை கழுவ வேண்டும் அல்லது பாலாடையில் தேசிப்புளி விட்டு முகத்தில் பூசலாம் .

- **காய்ச்சல்**

ஒரு பிடி மிளகு வறுத்து ஒரு கப் தண்ணீரில் காய்ச்சி ½ வாசியாகும் போது சக்கரை போட்டு காலை மாலை கொடுக்க வேண்டும்.

- **தொடர்ச்சியான காய்ச்சல்**

தேசிக்காயை 4 துாண்டுகளாக வெட்டி அவித்து சீனி விட்டு குடிக்க வேண்டும்.

**செபஸ்தியான்பிள்ளை மரிய அமலதாஸ்**
ஆயுர்வேத வைத்தியர், கறுவாக்கேணி

- **வீக்கம் அல்லது கட்டு திரட்டுதல்**

விண்தோண்டி கிழங்கு எடுத்து அதன் மேல் தோலை கழற்றி உளகிழங்கை பொடி செய்து அதேயளவு சின்ன வெங்காயம், ஆமணக்கு துளிர், மஞ்சள் சேர்த்து பழ தேங்காய்ப்பாலில் கொதிக்க வைத்து

எண்ணை திரண்டு வர தாங்க்கூடிய சூட்டில் வீக்கம் உள்ள இடத்தில் பூச வேண்டும் இவ்வாறு ஒரு நாளைக்கு 3 வேளை செய்ய வேண்டும்.

- **கட்டு வெடிக்காமல் திரண்டு போயிருந்தால்**

பழம்பாசி மிளகு 7 பச்சை அரிசி 7 சேர்த்து அரைத்து கட்டு வந்த இடத்தில் முற்றாக பூச வேண்டும் அதே வேளை அதன் மேலாக அகுறியை அதே முறையில் அரைத்து பூசினால் தீவிரமாக குணமடையும்.

- **ஆஸ்துமா (குழைந்தைகளுக்கு)**

உளுகுந்த மரத்தின் இலையினையும் பட்டையினையும் சம் அளவு கழற்றி எடுத்து உரலில் இடித்து தண்ணீர் விட்டுபிசைந்து அதன் சாறை மண்சட்டியில் அடுப்பில் வைத்து காய்ச்சி இறுகி வரும்போது ஒரு தேக் கரண்டி பருகக் கொடுத்தல் வேண்டும் பின்னர் எஞ்சியதை தாங்கக் கூடிய சூட்டில் முதுகு , தொண்டை, நெஞ்சு ஆகிய இடங்களில் பூச வேணடும்.

- **ஆஸ்துமா (வளர்ந்தவர்களுக்கு )**


மொசு மொசுக்கை இலையை நெய்யில் பொறித்து மிளகு தூள் மற்றும் உப்பும் சேர்த்து 40 நாளைக்கு தொடர்ச்சியாக நாளாந்தம் உண்ணும் உணவோடு உட்கொண்டு வர வேண்டும் .

- **கண்பார்வை கூர்மையாக நீரீழிவு நோய் கட்டுப்பட** கரிசலாங் கன்னியை வாரத்தில் 2 முறை சாப்பிட்டு வர கண்பார்வை கூர்மையாகி நீரீழிவு நோய் கட்டுப்படும் இக்கரிசலாங்கன்னி வயல்வெளி அல்லது ஆற்றங்கரைகளில் கிடைக்கும்.

**வீரக்குட்டி வெற்றிவேல்**
ஆயுர்வேத வைத்தியர், நாசிவன் தீவு.

- **மூல நோய்**

கொலிங்கிழங்கை அரை அவியலில் சமைத்து சின்னச்சீரகம் வேகாத அளவிற்கு சேர்த்து சாப்பிட வேண்டும் .



- **ஆண்மை தன்மை விருத்தி ஆக :**

முருங்கை கீரை, அகத்தி கீரை, தூதுவலை, பொண்ணாங்கன்னி, பசளிக்கீரை , தாழிக்கீரை தொடந்து சாப்பிட வேண்டும்.

முருகுப்பிள்ளை தியாகராசா
ஆயுர்வேத வைத்தியர், கல்குடா.

- **காய்ச்சல் இளைப்பு இருமல்**

ஆடாதோடை இலைச்சாற்றை தேனில் கலந்து குடித்தால் குணமாகும் .

- **உடல் பலமும் வலிமையும் பெற**

ஓரிதழ் தாமரையை காய வைத்து தினமும் காலையில் உண்ண வேண்டும்.

- **வயிற்றோட்டம் நீங்க**

வில்வம் இலை எடுத்து இடித்து அவித்து குடிக்கலாம் அல்லது வில்வம் பழத்தை தேனில் கலந்து உண்டு வந்தால் வயிற்றோட்டம் நீங்கும்.

- **கண் வலி**

வில்வம் பூவை கண்ணில் ஒத்தனம் கொடுக்க வேண்டும்.

மயில்வாகனம் புஸ்பராசா
ஆயுர்வேத வைத்தியர், கல்குடா.

# ஜனனித்து
## மீண்டுமொருமுறை ஜயத்துடன்



நீ என் உடன் பிறப்பல்ல
பிறப்பால் உடன் இல்லை யெனினும் நீ
என் மனத்திடத்தில்
உயிர்த் துடிப்பாய் இருக்கிறாய்

என்னிடத்தில் வேசமாய்
பாசம் காட்ட எத்தனையோ
சோதரங்கள்
அத்தனைக்கும் மத்தியிலும் -நான்
பாசம் வைக்க
ஆதியவன் தந்த சோதரி நீ

பாசம் வைக்க இறை தந்துவிட்ட
அருட் கொடை நீ எனக்கு
உன்னைப் பார்த்த அன்று
நானுணர்ந்தேன்
ஜென்மப் பிணைப்பதனில்
நீயும்
எனக்கு தாயாய் இருந்தாய் என்று

நீ உன்னிடத்தில் கேட்டுப்பார்
உன் அகக் கண்ணில் தோன்றிடும்
இவன் யாராய் இருக்கக் கூடும்மென்று
பாசம் வேசத்தால் மரணித்தது
என் மனதில்
மரணித்த எனதுள்

உன் முகம் பார்த்த அன்று
என் மனதின் ஜனனத்தை வளர்த்திடும்
சோதரியே
நான் உன்னில் தேடிய சொத்து
உன் உருவமல்ல உள்ளம் மட்டுமே நான்
உயிர் துறக்கும் வரை என்
உள்ளத்தை நீயும்
கொன்றிடாதே வேசமாய்
பாசம் வைத் தோர் போல்

வெறும் வார்த்தைகளில்
வர்ணிக்க முடியாத உள்ளம் நீ எனக்கு
உயிர் உள்ளவரை நினைத்திருப்பேன்
நான் இருக்கும் வரை நீ வாழ்கவென்று!

**க.நடேசன்**

# நிவாரணத் தண்ணீர் போத்தல்

கலாபூசணம் தாமரை செல்வநாயகம்




ஜில் ஜில் பரக்கு வெற்றிலை!...
வாங்க வரயில
போட்டுகிட்டுப் போங்க!...
வண்டி சென்றுவிடும்.
நான் நின்று விடுவன்!...

"ஒரு கிள்ளு... ஒரு தள்ளு... ஒரு மெல்லு!..." என்ற பாடலை அந்தக் காலம் ஐம்பது வருடங்களுக்கு முன்னர் 'ஜபார்சுல்தான்' என்னும் பீடா விற்கும் தெருப்பாடகன் இந்த மட்டக்களப்பு பஸ் நிலையத்தில் நின்றுதான் பாடினான்.

அவன் இந்த பஸ் நிலையத்தில் மாத்திரமல்ல. இலங்கையில் உள்ள எல்லாப் பஸ் நிலையங்களிலும் நின்று பீடா விற்று, இப்பாடலையும் பாடுவதனை பார்த்திருக்கிறேன்.

மாடு அசைபோடுவது போன்று கடந்த காலச் சம்பவங்களை நான் சற்று அசைபோட்டுப் பார்த்தேன். அவ்வளவு தான்... இன்றும் அவன் இந்த மட்டுநகர் பஸ் நிலையத்தில் நின்று பாடுவது போன்ற பிரமை எனக்கு ஏற்படுகின்றது.

மட்டக்களப்பு வாவியும் பஸ் நிலையமும் ஒன்றாகி ஒரு ஆறு போன்று காட்சியளிக்கின்றது. பஸ்கள் நிறுத்தப்பட்டிருந்த இந்த இடத்தில் இன்று தோணிகளும் இயந்திரப் படகுகளும் நிறுத்தப்பட்டிருக்கின்றன. சர்பத் கடை களையும் அப்பிள், தோடம்பழக் கடை -களையும் வரிசையாக குடை நிழலில் முக்காடு போட்டு அமர்ந்திருந்து கஜு கொட்டைகள் விற்கும் முஸ்லீம் பெண் களையும் காணவில்லை. வருவோர் போவோருக்கு கை பிடித்து சாத்திரம் சொல்லும் அழகிய குறத்திப் பெண்களை

யும் காணவில்லை. யாழ்ப்பாணத்து மாம்பழக் குவியல்களையும் பனங் கிழங்கு விற்கும் பையன்களைக் கூடக் காணவில்லை.

கோட்டைமுனைப் பாலத்தடியில் உயர்ந்து நிற்கும் மணிக்கூட்டுக்கோபு ரத்தடியில் நின்று தோணிக்காரன் சத்தம் இடுகிறான்....

"ஆஸ்பத்திரி !.. ஆஸ்பத்திரி !.. போற ஆக்கள் எல்லாம் ஏறுங்க தோணியில்.."

மணிக்கூட்டு கோபுரத்தின் கிழக்குப் புறமாகவுள்ள 'காந்தியின் சிலை' மந்திரத்தால் உறுக்கிவிடப்பட்ட நாயின் நிலையில் கொட்டும் மழையில் நின்று கொண்டிருக்கின்றது. சிலையின் மேல் உறைந்துபோயிருந்த காக்கா குருவிகளின் எச்சங்கள் மழை நீரில் கழுவுப்பட்டு மெருகேறி இப்போது தான் சிற்பியின் கைகளால் செதுக்கப்பட்ட சிலை போன்று அழகாவுள்ளது.

சந்திக்குச் சந்தி தெரு ஓரங்களில் எல்லாம் கவனிப்பாரற்றுக் கிடக்கும் பெரிய பெரிய மகான்கள், அறிஞர்களின் சிலைகள் எல்லாம் இந்த மழையால் தான் சுத்தமாகிக் கொண்டிருக்கின்றன. அந்த வகையில்... இடைவிடாது மாதக் கணக்கில் பெய்துகொண்டிருக்கும் மழையினை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

எனக்கு பத்து வயதாய் இருக்கும் போது இப்படித்தான் பெரு வெள்ளம் வந்தது. எனக்கு ஞாபகமாக உள்ளது. குளங்கள் எல்லாம் நிறைந்து, அணைக்கட்டுகளுடைந்து ஊருக்குள் புகுந்த வெள்ளம் ஆயிரக் கணக்கான மக்களையும் மாடு கண்டுகளையும் அள்ளிக்கொண்டு கடலுக்குள் சென்றுவிட்டது.

வெள்ளம் வடிந்ததும் அங்கு தெரிந்த காட்சிகள் இதுவரையில் சினிமாப் படங்களிலும் தொலைக்காட்சி மெகாத் தொடர்களிலும் வெளிவராத பயங்கரக் காட்சிகளாயிருந்தன.

மரங்களில் தொங்கிக்கொண் டிருந்த மனிதப் பிணைங்கள் ஜோடி ஜோடியாகப் பிணைக்கப்பட்ட நிலை யில் கிடந்த புளியமரங்களில் தொங் கிக்கொண்டிருந்த மாடுகளின் பிணங்கள் சரிந்த நிலையில் புளிய மரங்களில் குந்தியவாறு கிடந்த குழந்தைகள், குமருகள், முதியவர் களின் பிணங்கள் சொல்லவே மெய் சிலிர்கிறது.

"கிராமசேவகரின் காரியால யத்தில் வெள்ள நிவாரணம் வழங்கப் படும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அனைவரும் காரியாலயத்திற்கு வந்து நிவாரணச் சாமன்களைப் பெற்றுச் செல்லவும்" அந்த ஊர் கோவிலில் ஒலிபெருக்கியில் அறிவித்தல் வழங்கப் பட்டது.

57ம் ஆண்டு வெள்ளத்தில் ஆகாயக் கப்பலிலிருந்து பாண் மூடைகள் ஜேம், ரின் மீன்ரின் பருப்பு சீனி, கூப்பன்மா, மாசிக்கருவாட்டு மூடைகள் சனங்கள் கூடியிருந்த இடங்களில் கீழே போடப்பட்டன. பொறுக்கி எடுத்து சனங்கள் எல்லாம் சமமாகப் பங்கிட்டு எடுத்தன.

இன்று என்னதான் நடக்கிறது ... நவகிரிக் குளம் உடையப் போகிறதாம்!

உன்னிச்சைக்குளம் உடையப் போகிறதாம் !...

வாகநேரிக்குளம் உடையப்போகிறதாம்!... என பல வதந்திகள் பரவின. 'சூறா வளிக் காற்றும்' வீசப் போகிறதாம்.

"எழும்புங்க எல்லாரும் ஓடுவம்.." என்று பக்கத்து வீட்டிலிருந்து ஓடி வந்த 'பத்மா அக்கா' கூறுவது காதுக்குக் கேட்கிறது.

"சுனாமி வந்தால் ஓடித் தப்ப லாம். வெள்ளம் வந்தால் மாடி வீடு களில் ஏறியிருந்தாவது தப்பிவடலாம். சூறாவளி வந்தால் எங்கே ஓடுவது ?...."

எனது மகள் வசந்தி வீட்டில் இருந்த அனைவருக்கும் ஒரு குட்டி பிரசங்கம் செய்துவிட்டாள். அவள் படித்தவள் அந்தக் கிராமத்துப் பாடசா லையில் ஆசிரியர் வேலை செய்பவள். இந்தமுறை வந்த வெள்ளத்தில மடிந்தவர்களின் எண்ணிக்கை நூறினைக் கூட எட்டவில்லை.

அரசாங்கம் வெள்ள நிவார 'ணம் கொடுக்கப்போகிறதாம் என்டதும் அரச ஊழியர்கள், ஓய்வூதியர்கள் கல்வீடு மாடி வீடுகளில் உள்ளவர்கள் அனைவரும் அவ்வூர் அரசினர் பள்ளியில் கூடி விட்டார்கள்.

பெண்சாதிக்குத் தெரியாமல் புருஷனும் புருஷனுக்குத் தெரியாமல் பெண்சாதியும் பாய் தலையணை படுக்கை விரப்புக்களுடன் பாடசாலை யில் இடம்பிடித்துவிட்டார்கள்.

"ஓசிச்சாப்பாடு என்றால் உப்பு இல்லாட்டியும் பரவாயில்லை' என்றா னாம். அந்த மாதிரித்தான் ஓசிச்

சாப்பாடு கிடைக்கும் என்று 'பென் சன்காறி' றஞ்சிதம் அகதி முகாமுக்கு ஓடித்தாளாம்.

"அவளுக்கு என்ன தின்ன ஒண்டும் இல்லையா?..." என்று கூறி னான் 'வணிஸ்வாயன்' தனிகாசலம்.

"காலையில் ஒரு பாண் துண் டும் ஒரு வாழைப்பழமும் பகலைக்கு புளிச்சிப் போன ஒரு பருப்புக்கறிப் பாரசல் சோறு. இரவைக்கும் பாண்தான் இல்லாட்டி ஆட்டுக்கால் ரொட்டி சில வேளைகளில் நிறுவனக்காரனுகள் வந்தா பறாட்டவும் பருப்புச் சொதியும் கொண்டு தருவானுகள். இதுதான் வெள்ள அகதிகளுக்கு கிடைக்கும் சாப்பாடு" என்று கூறினான் 'ஆல்வாடி' ஆறுமுகம்.

"எங்கட வீட்டு வாசலில் நிக்கிற வெள்ளத்தில பொட்டியான் மீன் குஞ்சிகள் ஓடித்திரியுது. மழை பெய்யக்குள்ள வானத்தில இருந்து பனையான் மீன் முற்றத்தில விழு மாமே... அந்த நாளையில எங்கட அப்பா சொன்ன கதையிது வீட்டில நின்ட முருங்கமரம், பப்பாசிமரம் மஞ்சப்பூ அலரிமரம் எல்லாம் இலை பழுத்துக் கொட்டுப்பட்டு அழிஞ்சி போச்சுது. சுனாமி வந்து ஓலைக் குடிசையில் இருந்த எண்ட மூத்த மகளுக்கு கல் வீடு கிடைச்சித்து இந்த முறை வந்த வெள்ளத்தால எண்ட கடைசி மகளுக்கும் எப்படியும் ஒரு வீடெடுக்கப் பார்க் கோணும். வெள்ளம் வந்த, சுனாமி சூறாவளி வந்தா நம்மளப் போல ஏழைச்சனங்களுக்கு வேடனுக்கு வெள்ளக்கச்ச கிடைச்ச மாதிரித்தான் நல்ல கொண்டாட்டம் "என்றாள் அந்தக் கிழவி.

"அது சரி இந்தப் பணக்காரச் சனமெல்லாம் ஏன்? இந்த முகாமில வந்து கிடக்குதுகள். "அரசாங்கம் நிவாரணம் எண்டு என்னத்தையும் கொடுக்கும் எண்டுதான் மூக்குச் சீறியன் முத்தையாவும் தன்ர குடும்பத்தோட இங்க வந்து கிடக்கான் அவனிட்ட இல்லாத மாட்டுப்பட்டியா? சிறகு முளைச்ச காசெல்லாம் வச்சிருக்கான் அவன் ஏன் இங்க வந்துகிடக் கணும்..."

"அது பெரிய கத பொடிச்சி... அவங்கட வீட்டுப் பக்கம் எல்லாக் கிணறுகளும் நிறம்பி போச்சாம்... கக்கூசிகள் எல்லாம் நிறைப்பி வழியு தாம் குடிக்கிறதுக்குக் கூட தண்ணி இல்லயாம்".

"நல்ல தண்ணி இல்லாட்டி

என்ன? கொதிக்க வச்சிக் குடிக்கிறது தானே... கிணத்துக்குள்ள குளோரின் போடலாம் கொழும்பில கிடக்கிற சனங்கள் எல்லாம் குளோரின் போட்ட தண்ணி தானே குடிக்கிதுகள். வெள்ளத்தால விறகு எடுக்க ஏலா... கறண்டையும் நிப்பாட்டிப் போட்டானு களாம் ... கேஸ் அடுப்பு குக்கர் எல்லாம் வெள்ளத்தில அடிபட்டுப் போயித்தாம். அந்த சனங்கள் என்ன செய்யுங்கள்? சாப்பாடு தண்ணி போத்தலுகள் கிடைக்கும் எண்டு தானே இங்க வந்து கிடக்கிதுகள்"

"நம்மளப் போல எண்டு சொல்லு"...

"பாத்தயா புள்ள... பணக் காறன் பிச்சைக்காரன் எல்லாம் இந்த முகமில ஒரே சாதி தான் கண்ணுக்கு முன்னால கடவுள் காட்டிப்போட்டான் பாத்தியா?" என்றாள் பாக்கியம்.

சந்தைமாடு போல நானும் அந்த முகாமுக்குள் அந்த சனங்கள் கதைப்பதையெல்லாம் கேட்டுக் கொண்டு திரிகின்றேன். இப்படி சனங்கள் கூடும் இடங்களில் என்ன கதைக்கிறார்கள் என்று அறிந்துகொள் வதில் நான் மகா சூரன். பலத்தையும் அறிந்து தெரிந்து வைத்தால்தானே எதையும் எழுதிக் கிழிக்கலாம்.

"சும்மா கிடந்த வாய்க்கு ஒரு பிடி அவல் கிடைச்ச மாதிரி..."அந்த கிழவியும் வந்து சேர்ந்தாள்.

"எனக்கு நிறையப் புள்ள குட்டிகள் பேரன் பேத்திகள் ஆனா இப்ப ஒருபுள்ள குட்டியும் இல்ல மகனே!... எல்லாத்தையும் கட்டிக் கொடுத்துப் போட்டன். சிலதுகள் எனக்குத் தெரியாம புரிசன் பிடிச்சித்து ஓடித்துகள் ..."

"மொத்தமா எல்லாம் எத்தனை புள்ளயள் மனிசி "

"ஆறு பொம்பிளயும் ஆறு ஆண் பிளயும் எண்டு ஒரு டசின் பெத்துப் போட்டன் எல்லாம் வாண்டுத்துகள்..."

"பேரப்பிள்ளைகள் எத்தனை மனிசி..."

பேரப்புள்ளயள் எல்லாம் முப்பத் தாறு...அதுவும் சரியாத் தெரியா?...

அதுகளும் வகித்தில எல்லாம் உண்டாகித்து இருந்துச்சிகள். கொஞ்சம் கணக்குக் கூடித்தான் இருக்கும் இந்த நாசமாப்போன வெள்ளம் எண்ட வாடிக் குள்ள புகுந்திராட்டி நான் இந்த

முகாமுக்கு கடசி மட்டும் வந்திருக்க மாட்டன். குளம் உடஞ்சி வந்த தண்ணி நான் சமைச்சிச் சாப்பிடுற சட்டிபானையள மோட்டுக் கப்பில கட்டித் தூக்கியிருந்த சுண்ணாம்பு வாளைக் கருவாடு வேக்கு…குரக்கன் சாக்கு பயறுச் சாக்கு எல்லாத்தையும் அடிச் சித்து கொண்டு போயித்து நான் மட்டும் வெள்ளத்தில அடிபட்டு காடெல் லாம் அலஞ்சி திரிஞ்சி ஒரு மாதிரியாத் தப்பி வந்திற்றான் ."

"உனக்கு நிவாரணச் சாமன் தரமாட்டானுகளே … உனக்கு இந்த ஊரில பதிவு இருக்கா ஆச்சி?..."

"இந்த ஊரில எண்ட புள்ளயள் ஒண்டுரண்டுக்கு. பாதிவு இருக்கு … எனக்கு இல்ல மகனே!..."

"உனக்கு இங்க பதிவு இருந்தாத்தானே ஊர் விதான வெள்ள நிவாரணச் சாமான் தருவான்"

"எனக்கு காட்டுப் பதிவுதான் மகன் !.. புலி பாஞ்சகல் புண்ணியன் விதான தான் என்னைப் பதிஞ்சி சமுர்த்தி முத்திரை எல்லாம் தந்தவன்"

"அந்த அரிசிமூட விழுங்கி விதானையா?... உண்ட ஏரியாவில வேலை செய்யிறான்?..."

"ஓம் மகனே! அவன்தான் எல்லாப் புள்ளையளுக்கும் மாடி வீடு மாடிவீடாக் கட்டிப்போட டான். அந்தக் கதையெல் லாம் இப்ப நமக்கெதுக்கு? வெள்ள நிவாரணம் எணடு என்னத்தக் கொடுக்கப் போறானுகள்… வெறும் பச்சத் தண்ணிப் போத்தல் தான் கிடைக்கும் ."


"ஏன்? அரிசி, சீனி பருப்பு பாய் பிளாஸ்ரிக் பாத்திரம் எல்லாம் கொடுக் கிறானுகள் தானே..."

"மூண்டு கிலோ அரிசி அரைக்கிலோ சீனி அரைக்கிலோ பருப்பு எண்டு கொடுக்கிறானுகள் அதவச்சி எத்தனை நாளைக்கு ஆக்கிக்காச்சி சாப்பிடுற மகன்!..."

"நிவாரண சாமான் லொறி வருகிது எல்லாரும் போய் வரிசயா நில்லுங்க..." என்றாள் கிளவி

"என்ன கொண்டு வந்தா நமக்கு என்ன பாட்டி? பாம்பு தின்ற ஊருக்குப் போனா நடுத்துண்டு நமக்குத் தான் எதையெண்டாலும் சாப்பிடத் தான் வேணும் " என்று கூறினால் 'லங்காபுவத் புனிதா'

"தண்ணிப் போத்தலுகளத் தான் எத்திக்கொண்டு வாறானுகளாம்.



நமக்கு என்னத்துக்கு வெறும் தண்ணிப் போத்தல் ... ஒரு ஆளுக்கு ஒரு டசின் தண்ணிப் போத்தல் படி கொடுக்கப் போறானுகளாம். மற்ற மற்ற வெள்ளம் புடிச்ச பகுதிகளில் அந்தக் கணக்குப்படிதான் கொடுத்த -வனுகளாம்"

"அய்ய ஆச்சிக்குப் பன்னிரெண்டு தண்ணிப் போத்தல் கிடைக்கும் தண்ணிப் போத்தல் தந்தா நான் வாங்க மாட்டன் பசிக்கிற குடலுக்கு தண்ணிய மட்டும் குடிச்சி என்ன செய்யிற..."

"அப்படிச் சொல்லாத பாட்டி தண்ணிப் போத்தல் வங்கிறதுக்கு எண்டு வியாபாரி ஒருவன் வந்து ரெடியா நிக்கிறான் போத்தலுகள வாங்கித்து பின்பக்கம் போனயெண்டா ஓடைக்கரைப் பக்கமா உரவேக்கோட ஒருவன் குந்தித்து இருப்பான். அவன் தான் தண்ணிப் போத்தல் வாங்கிற வியாபாரி ஒரு போத்தலுக்கு பத்து ரூபாய் படி நூற்றி இருபது ரூபா தருவான். பேசாமா வங்கி மடிக்குள்ள கட்டித்து வா பாட்டி..." என்றாள் 'சுத்து மாத்து சுந்தரி' "வாச்சிப் போயித்து.. வெத்தில பாக்கு வாங்கிறதுக்கு எனக்கு காசாப் போயித்து..." காசை எண்ணி மடிக்குள் கட்டிக் கொண்டு பார்வதிப் பாட்டி முகாமை விட்டு நடையக் கட்டினாள்.

"கரிவிற்ற காசு
கரியாகிப் போகும்.
தண்ணி விற்ற காசு
தண்ணியாகிப் போகும்"

(நிச்சயமாக கற்பனையல்ல கதை மாந்தரை விட......)



# சம்பிரதாய கலாசார மாற்றத்திற்கான காரணம்

ஜெ.லோ. அம்றிதா
மட்/வாழைச்சேனை இந்துக் கல்லூரி.

கலாசாரம் என்பது பரந்த பொருளுடன் பயன்படுத்தப்படும் ஒரு சொல். ஆங்கிலத்தில் Culture (கல்ச்சர) என்னும் சொல்லுக்கு இணையான பொருளில் இச்சொல் தமிழில் பயன்படுத் -தப்படுகிறது. கலாசாரம் என்ற சொல்லும் பண்பாட்டுக்கு ஒத்த சொல்லாக பயன் - படுகின்றது. இது பொதுவாக மனித செயற்பாட்டுக் கோலங்களையும் அத்த கைய செயற்பாடுகளுக் சிறப்புத் தன்மை களையும் முக்கியத்துவத்தையும் கொடுக்கும் குறியீட்டு அமைப்புக்களை யும் குறிக்கின்றது. கலாசாரம் ஒரு பலக்கிய கருப்பொருள். அதற்கு பல நிலைகளில் வரையறை உண்டு. ஒரு நிலையில் கலாசாரம் என்பது ஒரு குழுவின் வரலாறு, போக்குகள், பண்புகள் புரிந்துணர்வுகள், அறிவு, பரம்பல்கள், வாழ்வியல் வழி முறைகள், சமூக கட்டமைப்பு என்பவற்றை சுட்டி நிற்கின்றது மொழி, உணவு, இசை, சமய நம்பிக்கைகள் தொழில்சார் தெரிவுகள் கருவிகள் போன்றவையும் கலாசாரத்தினுள் அடங்கும். பொதுவாக இது மனிதரின் நடவடிக்கைகளைக் குறிக்கிறது எனலாம். கலாசாரத்தின் வெவ்வேறு வரைவிலக்கணங்கள் மனித செயற்பாடுகளை விளங்கிக் கொள்வதற் கான அல்லது அவற்றை மதிப்பிடுவதற்

குரிய அளபுருக்களுக்கான வெவ்வேறு கோட்பாடுகளைப் பிரதிபலிக்கின்றன எனலாம்.

18ஆம் 19 ஆம் நூற்றாண்டு களின் மேலைத்தேச அறிஞர்களும் இன்று கூடச் சிலரும் கலாசாரம் என்பதை பண்பாடு நாகரிகம் (Civilization) என்பதோடு அடையாளம் கண்டு அதை ஒரு இயற்கைக்கு எதிரான ஒன்றாகக் கருதினார்கள். "உணர் கலாச்சாரத்தைக் குறைவாகக் கொண்டவர்கள் கூடுதல் இயல்பானவர்களாகக் கருதப்பட்டனர். அத்துடன் உயர் கலாசாரத்தின் சில அமசங்கள் மனித இயல்புகளை அமுக்கி விடுவதாகவும் சிலரால் விமர்சிக்கப் பட்டது. 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மானிடவியலாளர் பல்வேறுபட்ட சமூகங் களுக்கும் பயன்படுத்தத்தக்க வகையிலான கலாசாரம் என்பதன் பரந்த வரைவிலக் கணமொன்றின் தேவையை உணர்ந் தார்கள். படிமலர்ச்சிக் கோட்பாட்டைக் கவனத்துக்கு எடுத்துக்கொண்ட பிராணஸ் போவாஸ் போன்ற மானிடவியலாளர்கள் மனிதர் எல்லோரும் சமமாகவே படி மலர்ச்சியடைந்துள்ளனர் என்றும் எல்லா மனிதரும் கலாசாரத்தைக் கொண்டிருப்பத னால் அது மனிதனின் படிமலர்ச்சியின் விளைவாக ஏற்பட்டிருக்கலாம் என்றும் கருதினர். கலாசாரம் என்பது மனித இயல்பு என்றும், அது அனுபவங்களைப் பகுத்து குறியீடாக்கி குறியீட்டு முறையில் வெளிப்படுத்துவதற்கான உலகம் தழுவிய மனிதனுடைய தகுதியை மூலவேராகக் கொண்டது எனவும் அவர்கள் வாதித் தார்கள். விளைவாக ஒன்றிலிருந்து ஒன்று விலகி வாழுகின்ற மக்கள் குழுக்கள் தங்களுக்கெனத் தனித்துவமான பண்பாடுகளை உருவாக்கிக் கொள்கின்றன. எனினும் வெவ்வேறு கலாசாரங்களின் அம்சங்கள் ஒரு குழுவிலிருந்து இன் னொன்றுக்கு இலகுவாகப் பரவ முடியும். எனவே வழிமுறை நோக்கிலும் கோட் பாட்டுக் கோணத்திலும் பயனுள்ள வரை விலக்கணங்களை உருவாக்கிக் கொள்ள வேண்டிய தேவை மனிதவியலாளருக்கு ஏற்பட்டது.

கலாசாரம் என்பது விளங்கிக் கொள்ளும் இன்னொரு பொதுவான முறை மூன்று மூலகங்களை உள்ளடக்கி உள்ளது பெறுமானம் (எண்ணங்கள்) நெறிமுறைகள் (நடத்தை) மற்றும் பொருட்கள் (அல்லது பொருள் சார் கலாசாரம்) வாழ்வியல் முக்கியமானது எது என்பது பற்றிய எண்ணங்களே பெறுமானங்களாகும். அவை கலாசாரத்தின் ஏனைய அம்சங்களை

வழிநடத்துகின்றன. நெறிமுறைகள் (Norms) எனபன வெவ்வேறு சந்தர்ப்பங்களில் மக்கள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்ற எதிர்பார்ப்பு ஆகும்.

ஒவ்வொரு கலாசாரக் குழுவும இந்த பொது வழக்கங்களை நடைமுறைப் படுத்துவதற்கான வழிமுறைகளைக் கொண் டுள்ளது. சமூகம் நடைமுறைப் படுத்தும் இந்த நெறிமுறைகள், சட்டங்கள் எனப் பொதுவாக வழங்கப்படுகின்றன. மூன்றாவது அம்சமான "பொருட்கள்" கலாசாரத்தின் "பெறுமானங்கள்" நெறிமுறைகள் என்ப வற்றிலிருந்து பெறப்படுகின்றது.

கலாசாரத்தை மானிடவியலுடன் நோக்கும் போது கலாசாரமானது இசை, இலக்கியம், உணவு, ஓவியம், சிற்பம், நாடகம், திரைப்படம் போன்ற மனிதருடைய கலைப் பொருட்களிலும் நடவடிக்கைகளி லும் வெளிப்படுகின்றது. சில அறிஞர்கள் கலாசாரத்தை நுகர்வு பொருட்கள் என்பவற் -றின் அடிப்படையில் அடையாளம் காண் கின்றனர். ஆனால் மானிடவியலாளர் கலாசாரம் என்பது நுகர பொருட்களை மட்டுமல்லாது அவற்றை உருவாக்குவன வும் கலாசாரம் அவற்றுக்குப் பொருள் கொடுப்பனவுமான வழிமுறைகளையும் அப் பொருட்களும் வழிமுறைகளும் பொதிந்து உள்ள சமூகத் தொடர்புகள் செயல் முறைகள் என்பவற்றையும் குறிப்பதாக கூறுகிறார்கள். அவர்களைப் பொறுத்த வரை கலாசாரம் என்பது கலை அறிவியல் நெறிமுறைகள் போன்ற அனைத்தையும் உள்ளடக்கியது.

சமுதாயம் ஒன்றினுள் காணப்படும் கலாசாரமானது அந் நாட்டின் அரசினால் வழிநடத்தப்படும் விதத்திலும் அங்கு வந்து குடியேறும் குடியேற்ற சமுதாயத்திலும் ஏற்கனவே உள்ள மக்களின் மனபாங்கு பல்வேறு பட்ட சமூகப் பிரிவினரின் தொடர்புகள் என்பவற்றினால் மாற்றத்துக்கு உள் ளாகுவதனை அவதானிக்கலாம். ஆனால் அதனை முற்றுமுழுதாக ஆராய்வது சிக்கலானது. இருப்பினும் கலாசார மாற்றத்தின் காரணிகளை யும் விளைவுகளையும் நோக்குவோ மாயின், குறிப்பிட்ட ஒரு மக்கட் குழுவினருக்கு உரிய கலாசாரத்தல் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்படுவதை கலாசார மாற்றம் எனலாம். கலாசாரம் என்பது இயக்கத் தன்மை கொண்டது இதல் மாற்றங்கள் நிகழ்ந்த வண்ணமே இருக்கின்றன. கற்றறிந்த நடத்தைக ளின் தொகுப்பே கலாசாரம் என்பதால் புதியவற்றைக் கற்றுக் கொள்ளும்

போது மாற்றம் நிகழ்கிறது. இது குறித்த சில கலாசாரங்களுக்கு மட்டுமன்றி எல்லாக் கலாசாரத்துக்குமே பொருந்தும் ஒரு விடயமாகும்.

போக்குவரத்து வசதிகள் தொடர்பு வசதிகள் என்பன மிகவும் குறைவாக இருந்த காலத்தில் மாற்றங்கள் மிக மெதுவாக ஏற்பட்டன. இன்றைய கால கட்டம் பல துறைகளிலும் வேகமான மாற்றங்களைக் காணும் காலகட்டம் அறிவியல் வளர்ச்சியினால் போக்குவரத்து மற்றும் தொடர்பு வசதிகள் பெருமளவு வளர்ச்சி பெற்றுள்ளன. இதனால் பல்வேறு கலாசாரங்களைக் கொண்ட மக்களிடையே தொடர்புகள் அதிகரித்துள்ளன. ஒரு தரப்பாருடைய கலாசாரத்தில் இருந்து பல விடயங்களை மறு தரப்பார் கற்றுக் கொள்கிறார்கள். இதனால் கலாசார மாற்றம் தவிர்க்க முடியாததாகிறது. கலாசாரம் என்பது வெறுமனே பல்வேறு நடவடிக்கைகளின் தொகுப்பு அல்ல. அவை ஒன்றுக்கொன்று தொடர்பின்றித் தனித்தனியாகச் செயற்படுவதில்லை. கலாசாரம் என்பது இணக்கமற்ற ஒருங் கிணைந்த ஒரு ஒன்றியமாகும். இதனுள் உள்ள கூறுகள் அனைத்தும் செயல் நிலையில் ஒன்றோடொன்று இணைந்து செயல்படுகின்றன. ஒவ்வொரு கூறும் கலாசாரம் என்னும் முழுமைக்குள் மிகவும் ஏற்ற நிலையில் பொருத்தப் பட்டுள்ளது.

இதனால் ஒரு அம்சத்தில் நிகழும் மாற்றங்கள் கலாசாரத்தில் அனைத்துக் கூறுகளிலும் தாக்கங்களை உண்டாககுகின்றன. கலாசாரத்தின் பல்வேறு கூறுகளுக்கு இடையேயுள்ள பிணைப்பு கலாசார ஒருங்கிணைப்பு (Interation of Culture) எனப்படுகின்றது.

கலாசார ஒருங்கிணைப்பு இறுக்கமாக இருக்கும் சமுதாயங்கள் வேண்டாத மாற்றங்களை இலகுவில் ஏற்றுக் கொள்வதில்லை.

காலாசார மாற்றங்கள் நிகழ்வ தற்குரிய வழிமுறைகள் அறிஞர்கள் பகுத்தாய்ந்து வகைப்படுத்தியுள்ளனர் அவற்றுள் சில கண்டுபிடிப்புக்கள் புத்தாக்கங்கள், வெளிப்படுத்தல்கள், பரவல், பண்பாட்டுப் பேறு ஓரினமாதல் நவீனமயமாதல், தொழில்மயமாதல் நகரமயமாதல், புத்தாக்கங்கள் புரட்சி, மேற்கத்திய மயமாதல், உயர்குடியாக்கம் இந்துமயமாதல் மதமாற்றம் போன்ற பல்வேறு காரணிகளை கலாசார மாற்றங்களை உண்டு பண்ணும் என வரையறுத்துள்ளனர்.

தினந்தோறும் நடந்துவரும் பல்லேறு விதமான கலாசார சீர்கேடுகள் கணக்கின்றி அதிகரித்தவண்ணம் உள்ளன. நாகரிக உலகில் வாழ்கிறோம் என்று பெருமைப்பட்டுக்கொள்ளும் மனிதன் தன் அறிவை அடகு வைக்கும் பல காரியங்களை எந்தவித சலனமும்

இன்றி செய்துவருகின்றான். போதாக் குறைக்கு மீடியாக்கள் இத்தகைய அசிங் -கங்களை அழகாக காட்டிக் கொணடு இருக்கின்றது. இந்த வரிசையில் ஒன்று தான் காதலர் தினம் (Valentine Day) காதல் என்ற பெயரில் அரங்கேறும் அனாச்சாரங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. எத்தனையோ பெண்களும் ஆண்களும் கற்பை இழந்து கைசேதப்படுகின்றனர். மேற்கத்திய நாட்டில் இதுவெல்லாம் சாதாரணமாகி கலாசார சீர்கேட்டில் உச்ச நிலையில் உள்ளனர் ஆனால் தற்போது இலங்கை இந்தியா போன்ற நாடுகளிலும் இந்த நோய் பரவியதன் விளைவு பல தற்கொலைகளும் தலைகுனிவும் அதிக ரித்துள்ளன. வீட்டை விட்டு ஓடிப்போகும் பிள்ளைகளால் பெற்றோர்கள் அவமானப் பட்டு நிற்கின்றனர். இன்னும் சொல்லிக் கொண்டே போகும் அளவுக்கு பட்டியல் நீள்கிறது. இந்த மாற்றுமதக் கலாசாரத்தை பின்பற்றுவதால் இத்தனை அனாச்சா ரத்துக்கும் துணை செய்த பாவம் நம்மை வந்தடையும் . எனவே இதிலிருந்து நாம் சிந்தித்து தப்பிக் கொள்ள வேண்டும்.

மொழி, ஒரு குறிப்பிட்ட சமூகத் தின கலாசார வெளிப்பாடேயன்றிச் சாதி மதம் ஆகியவற்றுக்கும் அதற்கும் எந்த சம்மந்தமும் கிடையாது. அம்பேத்கார் ஒரு மிகச் சிறந்த சிந்தனையாளராக உருவாகி ஹிந்தி மதத்தின் ஆணி வேர்களை அசைத்துப் பார்க்க முடிந்தது என்றால் அவருடைய சமஸ்கிருத புலமையே இதற்குக் காரணம். மொழி யும் கலாசார மாற்றத்துக்கு உட்பட்டு உள்ளது. மேலைத்தேயரின் வருகை யினால் உள்வாங்கப்பட்ட ஆங்கில மொழி இன்று பொதுவாக எல்லா இன மக்களாலும் பேசப்பட்டாலும் குறிப்பாக தமிழர்களை தன் மேலாதிக்கத்திற்கு உட்படுத்தியுள்ளது. தமிழர் என தலை நிமிர்ந்து நிற்க வேண்டிய மக்கள் இன்று தமிழையே அன்னியமாகப் பார்க்கும் நிலை உருவாகிவிட்டது. ஆங்கிலம் கற்றலா தான் நாகரீகம் எனக்கூறி தம்பிஞ்சுப் பாலகர்களைக் கூட முள்பள்ளியில் ஆங்கிலம் பயில விடுவதினையும் தாமும் அவ்வாறான ஒரு கலாசாரத்தினுள் மாறிக் கொண்டும் உள்ளதனை நாம் அவதானிக்கலாம். மொழி மாற்றம் தெரிந்திருப்பது காலத்தின் கட்டாயத் தேவை என்றாலும் தாய் மொழியை மறந்து கலாசாரம் தேவையா? இதனைச் சற்று எண்ணிப் பார்ப்பது ஒவ்வொருவ ரதும் கடமையாகும் . தாய் மொழியில் கல்வி கற்பதனாலேயே தன்னில் உள்ள எல்லா ஆற்றல்களையும் வெளிக்காட்ட முடியும் என்பது ஆய்வாளர்கள் கருத் தாகும்.

கலாசார மாற்றத்திற்கு மற்று மொரு காரணம் பொருளாதார மாற்றம் இன்றைய காலகட்டத்தில் நடுத்தர குடும்பங்களின் பொருளாதாரம் நிதி



நிலைமை உயர்ந்து இருக்கிறது. அரச ஊழியங்களில் சம்பளம் உயர்ந்திருக் கிறது. அதேபோல் பன்னாட்டுத் தனியார் கம்பெனிகளின் வருகையும் அவர்கள் அவர்கள் தரும் சம்பளமும் தனிநபர் வருமானத்தையும் குடும்ப வருமானத் தையும் உயர்த்தியிருக்கிறது. அதனால் பணப் புழக்கம் அதிகமாகியுள்ளது. கையில் காசு இருந்தால் இதை வாங்கலாம் என்று யோசிப்பது இயல்பு தானே,? அந்த வகையில் உருவானது ஷாப்பிங் கலாசாரம் இரண்டாவது காரணம் 20 வருடங்களுக்கு முன்பு பெண்கள் அதிகபட்சம் அரசு ஊழியர்க ளாகவோ வங்கித்துறை பணியாளர் களாகவோ தான் வேலை பார்த்தார்கள்.

இன்று பன்னாட்டு கம்ப்யூட்டர் நிறுவனங்கள், கால் சென்டர்கள் பன்னாட்டு வங்கிகள், பார் கம்பனிகள் என வேலைவாய்ப்புகள் விரிவடைந்து இருக்கின்றன. அங்கெல்லாம் பெண்க ளின் கூட்டமும் ஆளுமையும் அதிக ரித்திருக்கின்றது. அதனால் அவர்களின் கையில் பணம் அதிகமாகப் புழங்கு கிறது. அதை அவர்களின் ஃபேவரைட் விருப்பமான 'ஷாப்பிங்' இல் செலவ ழிக்கிறார்கள். இதனால் பல கலாசார சீர்கேடுகளும் மாற்றங்களும் ஏற்படு கின்றன.

சமூக மாற்றம், பன்னாட்டு கம்பெனிகளின் வரவால் பன்னாட்டு கலாசாரத்தை கற்றுக்கொண்டோம். அவர்களைப் போலவே பீட்ஸா பர்கர் கோக் என சாப்பிடவும் அவர்களைப் போலவே ஆடை உடுத்தவும் கற்றுக் கொண்டோம் "ஷாப்பிங்கில் பெண்கள் அதிக பணத்தை நேரத்தை செலவிடுகி -றார்கள். என்றால் அதற்குக் காரணம் நுகர்வு கலாசாரத்தை நிமிடத்திற்கு

நிமிடம் வளர்க்கும் மீடியாக்கள் தான் 10,15 வருடங்களுக்கு முன் அதிகபட்சம் ஐந்தாறு டி.வி சேனல்கள் தான் இருந்தன இன்று நூறுக்கு மேற்பட்ட சேனல்கள் வந்து விட்டன நிமிடத்துக்கு பத்து பத்து விளம்பரங்கள் முகப்பூச்சு கிரீம்களுக்கு மட்டும் 100 விளம்ப ரங்கள் சோப் பவுடர் டீரெஸ் நகை மிக்ஸி கிரைண்டர் ஃப்ரிட்ஜ் கம்ப்யூட்டர் மட்டுமில்ல... சாப்பாட்டில் உப்பிலிருந்து மிளகாய்த்தூள், மஞ்சள் தூள், சிப்ஸ் சாக்லேட் பிஸ்கட் என எல்லாவற்றுக்கும் விளம்பரங்கள்... விளம்பரங்கள் இந்தத் தலைமுறையினர் விளம்பரங்களோடு சேர்ந்து வளர்கிறார்கள். இது நம்மகிட்ட இருக்கு இது இல்ல வாங்கனும் என்ற விளம்பரப் பொருட் களில் தான் தங்களின் வாழ்க்கையைப் பொருத்திப் பார்கிறார்கள் இதன் அசுரத் தனமான ஆளுமை விளம்பரங்களில் மின்னும் பிராண்டட் பொருட்களின் பின்னால் நம்மை ஓடவைக்கிறது. அந்தப் பொருள் தேவைப்படுகிறதோ இல்லையோ... வாங்கி வைத்துக் கொள்கிறோம். நாம் நம் வீட்டில் சமையல் அறையில் வாங்கி அடுக்கி வைத்திருக்கும் எத்தனைப் பொருட் களை முழுமையாகப் பயன்படுத்துகிறோம் நாம்...?

"அடுத்து இன்று தனக்குப் பிடித்த சினிமா நட்சத்திரங்கள் செல்ப்ரிட்டி களின் உடமைகளைப் போல தாங்களும் 'சீஸனல்' உடைகள் வாங்கி குவிக்கும் மனோபாவத்தில் இருக்கும் இளைஞர்கள் அதிகம். 'என்னிடம் இத்தனை புடவை சுடிதார் இருக்கிறது ' என்று பெருமையாக சொல்லும் பெண்களையும் நாம் பார்க்கிறோம் இப்படி ஆசைக்காக, ஆர்வக் கோளாறுக்காக 'ஷாப்பிங்' அடிசஷனில் காசைக் கரியாக்கு வதற்குப் பதில் அதை ஒரு சேமிப்பாக முதலீடாக ஆக்கலாம் தானே?" அது நன்மையும் கூட "முந்தைய தலை முறை எது தனக்கு மிகத் தேவையோ அதை மட்டும் வாங்கினார்கள் . நாம் தான் பயன் இருக்கிறதோ இல்லையோ... எல்லா வற்றையும் வாங்குகிறோம். இந்த வேறுபாடுதான் ஷாப்பிங் கலாசாரத்தை பம்பரமாக சுழல வைத்துக்கொண்டு இருக்கிறது. அதனால்தான் இந்தியாவில் கலியாண ஷாப்பிங்கில் மட்டும் 2000 கோடி ரூபாயைக் கரைக்கிறோம்! அவசியத் -துக்குப் பொருளா, ஆடம்பரத்துக்குப் பொருளா என்பதை நாம்தான் முடிவு செய்ய வேண்டும் !"

எனவே நாம் காலம் கால மாக பேணிவந்த பழக்க வழக்கங்கள் சம்பிரதாயங்கள் அனைத்துமே ஏதோ ஒரு வகையில் மாற்றத்துக்கு உள் - ளாகிவிட்டது என்றே கூறலாம். இருப்பினும் சிறிதளவிலேனும் இம் மாற்றங்களை தமிழர்களாகிய நாம் மாறவிடாமல் காப்பாற்றி எம் மரபி னைப் பேணி எம் சம்பிரதாயங்களை இளம் சந்ததியினருக்கு கொடுப்போமாக.




"அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது" என்ற ஔவைப் பாட்டியின் அமுத வாக்கிற்கு ஒப்ப இறைவனது அரிய படைப்புக்களில் உயர்ந்ததும் உன்னதமானதும் மனிதப் படைப்பாகும். மனிதனின் வாழ்வு அதைவிட பெறுமதிமிக்கது. மனிதனின் முதிர்ச்சி அவன் பேசும் மொழியை அடிப்படையாகக் கொண்டது. அவனது மொழியின் முதிர்வும் செழுமையும் அவன் சார்ந்துள்ள இலக்கியத்தை அடிப்படையாகக் கொண்டது. அவன் நேசிக்கும் இலக்கியம் சார்ந்த படைப்புக்கள் அவனது வாழ்விற்கு மேலதிக அடர்த்தியை வழங்கும். இதனடிப்படையில் இலக்கியமும் கலையும் மனித வாழ்வை எவ்வாறு செழுமைப்படுத்துகின்றன என நாம் நோக்குவது இங்கு அவசியமாகிறது. அவ்வகையில் இலக்கியம் கலை என்றால் என்ன? இதற்கும் மனிதனுக்குமான தொடர்பு எத்தகையன? என்பதனை முதலில் நோக்குவோம்.

இலக்கியம் ஒரு கலை. கலை என்றால் சொல்லுகின்ற அல்லது சொல்ல விரும்புகின்ற செய்திகளை அழகும் நேர்த்தியும்படச் சொல்வது காண்பார், கேட்பார் அல்லது படிப்பார் சுவை படவும் அவர்கள் மனம் கொள்ளுமாறும் அவர்கள் சிந்தையில் அல்லது உணர்வில் ஓரளவாவது அசைவையும் தாக்கத்தையும் ஏற்படுத்துமாறும் அமைவதும் மேலும் மேலும் காணுமாறும் கேட்குமாறும் படிக்குமாறும் ஓர் ஆர்வத்தை தூண்டுவது படைப்பாற்றல் பண்பு இப்பண்பே கலைக்கும் இலக்கியத்திற்கும் அடிப்படைப் பண்புகளாகும்.

இந்த வகையில் கலைகள் பல அறுபத்து நான்கு எனச் சொல்லப்படுகிறது. இலக்கியம் அவற்றுள் தலையாய கலை இது மொழிகள் கலை என்று சொல்லப் படுகிறது. மேலும் மொழியை ஊடிழையாகக் கொண்டு அமையும் இந்தக் கலை நுண்கலை, பயன் கலை என்றும் சொல்லப்படுகிறது மனித சமுதாயத்தின் வாழ்கைப் பின்புலங்களை புடம்போட்டு காட்டுவது இலக்கியமாகும்.

இலக்கியமும் கலையும் மனிதனின் உயர்ந்த கொள்கைகளை இரசிக்கவும் செய்கிறது. இலக்கியமும் வாழ்வும் இணை பிரியாதவை, இறுக்கமானவை. வாழ்க்கை பற்றிய வியர்ப்பும் , வாழ்வு குறித்த இரசனையும் தீர்ந்து போனால் இலக்கியம் இறந்து போகும் . மனித வாழ்வை மதிப்புக் குரியதாக மாற்றியமைத்தலில் நல்ல இலக்கியங்களுக்கு பெரும்பங்கு இருக்கிறது. இலக்கியமும் கலையும், இன, மத, மொழி தாண்டியது. அதனால் தான் இன்றுவரை அவை மனித வாழ்வை நெறிப்படுத்தி மனிதகுலத்தை மாண்புறச் செய்து நாகரிகங்களையும் விஞ்சி நிற்கின்றன. வாழ்கை விதைத்த கதைகள் தான் கலைகளாகவும் இலக்கியங்களாகவும் பரிணமிக்கின்றன மனித மனம் சாகாத வரை வாழ்வும் சாவதில்லை இலக்கியமும் கலையும் தீராத வரையில் உலகமும் தீரப்போவதில்லை.

பிளவுபட்டுக்கிடந்த மனித குலத்தை இலக்கியமும் கலைகளும் ஒரு புள்ளியில் இணைத்து விடுவதும் பெரும் ஆச்சரியத்துக்குரியது, இவை இரண்டும் மனித இதயத்திற்கு அமைதியைத் தருகின்றன இறந்து போனவற்றை இழப்பீடு செய்கின்றன. எந்த மதம், எந்த மொழி , எந்த இனம். எனினும் அவை இரண்டுமே மனித வாழ்வைத் தான் வளப்படுத்துகின்றன. இறந்த பின்னும் இதயங்களில் வாழும் அருகதை பெற்றன. இவையிரண்டும் தான். இதனால் தான் மக்கள் உயிர்களை இழந்தாலும் அரசுகளை இழந்தாலும் இவ்விரண்டையும் இழக்க தயாரில்லை

என்று சொல்லப்படுகிறது. மனிதர்கள் வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கான மனித நேயப் பண்புகள் அனைத்தும் ஒட்டுமொத்தமாகத் திரட்டி தருவன இவ் இலக்கியமும் கலைகளுமே என்றால் அதனை மறுப்பாரில்லை.

உள்ளத்தை திறப்பதற்கும் அதைத் திருத்திச் செம்மைப்படுத்துவதற்கும் தவறுகளைப் போக்கும் வண்ணம் உண்டாக்குவதற்கும் நல்லனவற்றை மேற் கொள்வதற்கும் அவற்றைப் பிறர்க்கு எடுத்து கூறுவதற்கும் இலக்கியம் பயன்படுகின்றது. இத்தகைய பண்பைக் கொண்டவையாக திகழ்பவை நம் சங்க இலக்கியங்கள். சங்காலப் புலவர்கள் தம் வாழ்வில் பட்டறிந்த உண்மைகளைப் பாடல்களாக வடித்துள்ளனர். இவை மனித வாழ்வைப் பண்படுத்தும் எக்கால வாழ்வியல் கோட்பாடுகளுக்கும் பொருந்துவனவாய் அமைகின்றன.எடுத்துக்காட்டாய் கணியன் பூங்குன்றனாரின் "யாதும் ஊரே யாவரும் கேளிர்..." எனத் தொடங்கும் புகழ் பெற்ற பாடல் உலக வாழ்வின் நிகழ்வுகளை விருப்பு வெறுப்பு இல்லாமல் ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவத்தினை உணர்த்தும் பாடல் ஆகும் உலகில் உள்ள ஒவ்வோர் ஊரும் அனைவருக்கும் சொந்தமானதே உலக மக்கள் அனைவரும் உறவினரே நன்மையும் தீமையும் பிறரால் நமக்கு ஏற்படுவதில்லை நம் செயல்களே அவற்றுக்கு காரணம் என்பதனை உணர வேண்டும் இறப்பு என்பது உலகில் புதியதல்ல எப்போதும் நிகழ்ந்து கொண்டே இருக்கக் கூடிய ஒன்று எனவே வாழ்கை இனிமை என்று மகிழ்ச்சியடைவதும் வாழ்க்கை துன்பமானது என வருந்துவதும் கூடாது. வாழ்கையை அதன் போக்கிலேயே எடுத்துக் கொள்ள வேண்டும். சிறப்புப் பெற்ற பெரியோரைப் பார்த்து வியப்பதும் கூடாது என அரிய பெரும் வாழ்க்கைத் தத்துவத்தினைக் கூறி மனிதனை மண்ணில் நல்ல வண்ணம் வாழ வழிகாட்டியுள்ளது சங்க இலக்கியம்.



அதுமட்டுமன்றி மனிதர்களை ஒழுக்க சீலராக மாற்றிய பண்போடு வாழ வழி சமைத்தவையும் இலக்கியங்களே.

"பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல் " எனனும் உயரிய சிந்தனை முன்வைக்கிறது. புறநானுறு பண்பாடு இல்லாமல் ஒழுக்க மில்லை. ஒழுக்கமில்லாமல் பண்பாடில்லை ஒழுக்கம் தான் பண்பாட்டின் மூலாதாரம். அதுதான் மனித வாழ்வியலின் அத்திவாரம். இதனையும் உணர்த்தி எடுத்துக்காட்டாகத் திகழ்வன. அவ்வவ் கால இலக்கியங்கள் குறிப்பாக தமிழ் கூறும் நல்லுலகில் தமிழர் தம் உயர்ந்த தமிழ்ப் பண்பாட்டில் ஒழுக்கம் என்பது மிகவும் உன்னதமான இடத்திலேயே அன்றும் இன்றும் என்றும் நின்று மனிதனை மகத்தானவனாக்குகிறது. தமிழ் இலக்கியங்கள் இதிகாசப் புராணங்கள் அனைத்திலுமே ஒழுக்கத்தின் மேன்மை-யையும் ஒழுக்க சீலராய் வாழ்ந்த பாத்திரப் படைப்புக்களையும் கண்டு தரிசித்து தாமும் வாழ வழிகாட்டுகின்றது அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் மாதா பிதா குரு தெய்வம் மூத்தோர் சொல் வார்த்தை அமுதம் என்ற இலக்கியங்கள் கூறும் ஒவ்வொரு வரியும் "கற்கக் கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்க்குத் தக" என்ற வள்ளுவன் வாய் மொழியும் மனித சமுதாயத்தினை ஒழுக்கமான சமுதாயமாக உருவாக்க வழி கோலவில்லையா?

நாகரிக வளர்ச்சியில் பின் தங்கிய காலத்தில் மலர்ந்த நேயப் பண்பைவிட இக்காலச் சூழலில் மனிதன் மற்ற உயிர்களையும் தன்னையும் நேசிக்கும் பண்பு தேய்வானத்தை நோக்கியும் தனது வளர் நிலையச் சிக்கலையும் எதிர் நோக்கியுள்ளது தொய்வடையும் மனித நேயப் பண்பினை மீட்டுருவாக்கம் செய்தல் அவசியமாகும். இதனை செய்ய வல்லவை பண்டைய இலக்கியங்களே வள்ளுவர் தந்த பொய்யாமொழி இவற்றுக்கான மருந்தாய் அமைகிறது தனி மனிதன் சமுதாயம் என்ற தொடர் அமைப்பில் வாழ்க்கை பாடங்களைப் புகட்டுகிறது இல்வாழ்க்கைப் பண்பு அன்பு நட்பு என அடுக்கிக் கொண்டே போகிறது அதுமட்டுமன்றி மனிதனை விலங்கிலிருந்து மாற்றியமைக்க காதலை புனிதமாக்கிக் காட்டுகிறது மனித மனதில் காதலை உருவாக்கி மனிதர்களிடையே உட்பிணைப்பை ஏற்படுத்துவதும் நேயத்தை மேன்மையுறச் செய்வதும் காதல் என்கிற நேசிக்கும் பண்பே என சாதி, மதம் ,இனம் , மொழி கடந்த நேயத்தை உருவாக்கும் மாபெரும் சக்தி "காதல்" என வள்ளுவர் மட்டுமன்றி "காதல் செய்வீர் உலகத்தீரே" என காதல் நேயத்தை பாரதியும் கூறிச் சென்றனர் தம் இலக்கியம் வாயிலாக இதனைக் கண்டுணர்ந்த மனிதர்கள் தாமும் காதல் செய்து மனித நேயத்துடன் வாழ்கின்றனர் மனித குலத்திற்கு உயர விழுமியங்களை ஊட்டியவை இவ் இலக்கிய பொருண்மைகளே.



மூலிகைகளினால் இரும்பு பொன்னாவது போல இலக்கியங் களால் மனிதன் புனித நிலை அடைகிறான் எனலாம். இலக்கியங் களை மனிதன் படிப்பதனால் அஞ்ஞான நோய் நீங்கி மெஞ்ஞான அறிவைப் பெருக்கிக் கொள்கிறான். புதிய ஓர் உலகில் புதிய மனிதனாக வாழ முற்படுகின்றான். இலக்கியம் போன்றதே கலைகளும் இறை வனிடமிருந்து உலகிற்கு கொண்டு வரப்பட்ட நுண்கலைகளான இயல், இசை, நாடகம், ஓவியம், சிற்பம், கட்டிடம் என்பவையும் மனித வாழ்வைப் பண்படுத்துகின்றன என்றே கூறலாம். குறிப்பாக "இசையால் வசமாகாத இதயமே இல்லை" எனும் அளவிற்கு இசை மனிதனை கட்டியாழ்கின்றது எனலாம். இறைவனே 'நாதப்பிரமம்' என்கின்றோம். எல்லா இன மக்களின் இறை வழிபாட்டிலும் முதன்மை இடம் பெறுவது இசையாகும். இசைக்கு இறைவனே அடிமையாகும் போது மனிதன் மட்டும் எம்மாத்திரம்? மனிதனுக்கு ஏற்படுகின்ற மன உளச்சல் , மன நோய், களைப்பு , துன்பம் என்கின்ற பல்வேறு விடயங்களிலும் இசை தன் பங்கைச் செலுத்துகிறது. இசையால் வியாதியும் குணமாகி மனிதன் மனித நேயத்துடன் வாழத் தலைப்படுகிறான் . அதேபோன்று ஓவியமும் சிற்பமும் புனிதத்தன்மை வாய்ந்த கலைகளாகும். மனிதன் மனதின் சஞ்சலங்களை நீக்குவதில் இவை பெரும் பங்காற்றுகின்றனர். அவனை இரசனை உடைய அழகிய மனம் படைத்தவனாக மாற்றுகின்றன.

எனவே, மனிதன் மனிதனாக வேண்டுமா? மனித நேயத்துடன் புனிதனாக வேண்டுமா ? இவற்றை மனிதனுக்குப் போதிக்கின்ற போதி மரங்களாக உள்ளவை இலக்கியமும் கலைகளும் என்றால் யார்தான் இதை மறுப்பார்.

# தாய்



கி.சைலேத்திரிக்கா

ஆழமாய் முத்தெடுக்கப்பட்டவள்
சிப்பியாய் இமையில் வைத்துக் காப்பவள்
ஆழ்கடல் அன்பு அவள் - என்றும்
அன்பால் அலைமோதுபவள்.
கால்மேல் கால்போட்டு
வாழ்ந்தவள் - தாயான பின்
தரையில் குழந்தையுடன் தவழுகிறாள்

மாடி வீட்டின் அத்திவாரம்
நிலத்தில் மறைந்து விடும் – அதுபோல் அவள்
தாங்குபவள் என்னை ஏங்குபவள்
அறியா வயதில் என் எச்சில்
கலைந்தவள் – இன்றும் எனக்காய்
பூரிப்புடன் தன் சேவையாய் எண்ணி தொடர்கிறாள்......

அன்று என்னுடன் குழந்தையாய்
விளையாடினாள் – குருவாய் பணியாற்றினாள்
தோழியாய் துணைநின்றாள் – மற்றானை
தன் மருமக்களை ஏற்று மறுதாயானாள்
என் குழந்தைக்கு செவிலிதாயானாள்
என் பேரப்பிள்ளைக்கு மீண்டும் – இன்று
குழந்தையாய் மாறிவிட்டாள்.......

அவள் யார் .......?
தாயா .....? சேயா .....?
தோழியா ...? துணைவியா .....?
செவிலியா ......?
நேரில் கண்ட இறைமகள்
அவள் என்றும் என் தாய்
என் செல்லக்குழந்தை....

# பிரதேச மட்ட தேசிய இலக்கிய விழா - 2015

## பாலர் பிரிவு

| இல. | போட்டி தலைப்பு | பெற்ற நிலை | பெயர் | பாடசாலை |
|---|---|---|---|---|
| 1 | கவிதைப் பாடல் | 1 | அ.அஸ்டெலா ஏஞ்சல் | மட்/வாழைச்சேனை இந்துக் கல்லூரி |
| | | 2 | ஜெ. அத்விகா | மட்/வாழைச்சேனை இந்துக் கல்லூரி |
| 2 | கை எழுத்துப் போட்டி | 1 | ஜெ. அத்விகா | மட்/வாழைச்சேனை, இந்துக் கல்லூரி |
| | | 2 | ச. தனோஜன் | மட்/வாழைச்சேனை இந்துக் கல்லூரி |
| | | 3 | ஹ. கினுக்ஷாந் | மட்/வாழைச்சேனை இந்துக் கல்லூரி |

## கனிஷ்ட பிரிவு

| இல. | போட்டி தலைப்பு | பெற்ற நிலை | பெயர் | பாடசாலை |
|---|---|---|---|---|
| 3 | கவிதை எழுதுதல் | 1 | கு. ராஜா சுஜா | மட்/கல்குடா நாமகள் வித்தியாலயம் |
| | | 2 | சௌ. சுலோஜினி | மட்/கல்குடா நாமகள் வித்தியாலயம் |
| | | 3 | யோ. பவுஜிகா | மட்/கல்குடா நாமகள் வித்தியாலயம் |
| 4 | கட்டுரைப் போட்டி | 1 | ஜெ. அம்றிதா | மட்/வாழைச்சேனை இந்துக்கல்லூரி |
| | | 2 | ஸ்ரீ. மேனுதரன் | மட்/பேத்தாழை விபுலானந்தா வித்தியாலயம் |
| 5 | கவிதைப் பாடல் | 1 | அ. அர்னோல்ட் | மட்/ வாழைச்சேனை இந்துக் கல்லூரி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 2 | தர்சாணியா | மட்/ வாழைச்சேனை இந்துக் கல்லூரி |
| | | 3 | ஜெனிற்றா | மட்/ பேத்தாழை விபுலானந்தா வித்தியாலயம் |

## சிரேஷ்ட பிரிவு

| இல. | போட்டி தலைப்பு | பெற்ற நிலை | பெயர் | பாடசாலை |
|---|---|---|---|---|
| 6 | கவிதை எழுதுதல் | 1 | யோ. சங்கவி | மட்/வாழைச்சேனை இந்துக்கல்லூரி |
| | | 2 | த. றூத் | மட்/பேத்தாழை வபுலானந்தா வித்தியாலயம் |
| | | 3 | ஸ்ரீ. துஷியந்தி | மட்/பேத்தாழை வபுலானந்தா வித்தியாலயம் |
| 7 | கட்டுரைப் போட்டி | 1 | ஸ்ரீ. துஷியந்தி | மட்/பேத்தாழை வபுலானந்தா வித்தியாலயம் |
| | | 2 | க. சுபோந்தினி | மட்/ வாழைச்சேனை இந்துக் கல்லூரி |
| 8 | கவிதைப் பாடல் | 1 | ம. சுலக்ஷன் | மட்/பேத்தாழை வபுலானந்தா வித்தியாலயம் |
| | | 2 | றெமியா | மட்/பேத்தாழை வபுலானந்தா வித்தியாலயம் |
| | | 3 | உ.. தனிக்ஷ்சா | மட்/ வாழைச்சேனை இந்துக் கல்லூரி |
| 9 | பாடல் நயத்தல் போட்டி | 1 | ஆ. ஜெயவாணி | மட்/பேத்தாழை வபுலானந்தா வித்தியாலயம் |
| | | 2 | யோ. ரோகினி | மட்/பேத்தாழை வபுலானந்தா வித்தியாலயம் |
| | | 3 | வி. நிறோஜனி | மட்/ வாழைச்சேனை இந்துக் கல்லூரி |

## திறந்த பிரிவு


| இல. | போட்டி தலைப்பு | பெற்ற நிலை | பெயர் | முகவரி |
|---|---|---|---|---|
| 10 | பாடல் ஆக்கப் போட்டி | 1 | எ. ஜெயரஞ்சித் | 231/A, வாணி வித்தியாலயம் ஒழுங்கை, புதுக்குடியிருப்பு. |
| | | 2 | க. சிவதர்சன் | மீராவோடை வீதி, கிண்ணையடி. |
| | | 3 | மு. இந்திராதேவி | புதுகுடியிப்பு, வாழைச்சேனை. |
| 11 | நாட்டார் கலை கற்றல் போட்டி | 1 | க. சிவதர்சன் | மீரா வோடை வீதி, கிண்ணையடி. |
| | | 2 | ஸோபா ஜெயரஞ்சித் | 231/A, வாணி வித்தியாலயம் ஒழுங்கை, புதுக்குடியிருப்பு. |
| 12 | விவரணப் போட்டி | 1 | ஸோபா ஜெயரஞ்சித் | 231/A, வாணி வித்தியாலயம் ஒழுங்கை, புதுக்குடியிருப்பு. |
| | | 2 | க. சிவதர்சன் | மீராவேடை வீதி, கிண்ணையடி. |
| 13 | சிறுகதைப் போட்டி | 1 | க. சிவதர்சன் | மீராவேடை வீதி, கிண்ணையடி. |
| 14 | கவிதைப் போட்டி | 1 | எ. ஜெயரஞ்சித் | 231/A, வாணி வித்தியாலயம் ஒழுங்கை, புதுக்குடியிருப்பு. |
| | | 2 | க. சிவதர்ஷன் | மீராவேடை வீதி, கிண்ணையடி. |
| | | 3 | மு. இந்திராதேவி | புதுக்குடியிருப்பு, வாழைச்சேனை. |
| 15 | சிறுவர் கதைப் போட்டி | 1 | ஸோபா ஜெயரஞ்சித் | 231/A, வாணி வித்தியாலயம் ஒழுங்கை, புதுக்குடியிருப்பு. |

# கோறளைப்பற்றுப் பிரதேசத்தில் காணப்படும் தொல்பொருட்கள்

மு.சதாகரன்

**நூறு வருடங்களுக்கு மேல் பழமைவாய்ந்த பொருட்கள் தொல்பொருட்களாகும். கோறளைப்பற்று பிரதேச பிரிவில் அடையாளம் காணப்பட்ட சில தொல்பொருட்கள் கீழே தரப்படுகின்றன.**

## [1] இறங்குதுறை




பாசிக்குடாவின் கிழக்கே 1901ல் டச்சுக்காரரால் அமைக்கப்பட்டதாகக் கருதப்படும் இறங்குதுறை காணப்படுகின்றது. இது சுனாமியின் பின் அழிவடைந்த நிலையில் மேற்படி காட்சியளிக்கின்றது.

## [2] வெளிச்ச வீடு



டச்சுக்காரர்களால் அமைக்கப்பட்டதாகக் கருதப்படும் வெளிச்சவீடு இது **"நோனாக்கோரி"** என கூறப்படுகின்றது. இப்படம் சுனாமிக்கு முன்னர் எடுக்கப்பட்டதாகும். சுனாமியில் அழிந்துவிட்டது.



ஆனால், தற்போது இவ்விடம் கடற்படைக்குச் சொந்தமாக உள்ளது. அவர்கள் இவ் வெளிச்சவீடு அழிவடைந்த இடத்தில் இவ்வெளிச்சவீட்டை அமைத்துள்ளார்கள்.

### [3] 2ம் உலக மகா யுத்தத்தில் அழிவடைந்த கப்பல்

இவ்வெளிச்சவீட்டுப் பகுதிக்கு வடக்கு நோக்கி சுமார் 500m தொலைவில் இக்கப்பல் கடலோரம் அமிழ்ந்துள்ளதாகக் கூறப்படுகின்றது. அங்கு பாதுகாப்புக் காரணங்களுக்காக தரையால் செல்ல முடியாது என்றும், படகில் தான் செல்ல வேண்டும் என்றும் கூறப்படுகின்றது. பிரித்தானியாவுக்குச் சொந்தமான இக்கப்பலை யப்பான் குண்டுபோட்டு அழித்ததாகக் கூறுகின்றனர்.



தகவல் : கலாபூஷணம் தாழை செல்வநாயகம்

# கலைஞர் கௌரவம்



**பெயர்** : திரு.சதாசிவம் - கதிர்காமர் (சாமியார்)

**பிறந்த திகதி** : 1944.01.31

**வயது** : 71

**துறை** : உடுக்கடி வாத்தியக் கலைஞர்

**பிறந்த இடம்** : ஓட்டமாவடி

**தொழில்** : ஓய்வு பெற்றவர்
PAMB HOUSE OPRATER
காகித ஆலை - வாழைச்சேனை.

**கலை** : உடுக்கு அடித்து அம்மன் காவியம் காவடிச்சிந்து, கும்மி பாடுதல் சடங்கு முறையிலான ஆலயங்களின் பிரதம பூசாரி, நகைச்சுவை நடிகர்.

**பதவி** : கருவேப்பங்கேணி மகா காளியம்மன் ஆலய ஸ்தாபகர், நிருவாக சபை தலைவர்







ஷெரானி பிரிண்டர்ஸ் - கூளாவடி, மட்டக்களப்பு 065 2228660